உ

ஆரம்பம் :

விரோதி ௵ ஆவணி ௴ 26ஆம் ௳ (1889)

சைவ பரிபாலன சபை வெளியீடு

பிரதி விலை : ரூபா 50.00

# இந்து சாதனம்

(HINDU ORGAN)

ஹேவிளம்பி வருடம் மார்கழித் திங்கள் 01ஆம் நாள்

புத்தகம் : 129 | 16-12-2017 | இதழ் : 05

# தில்லையில் கூத்தனுக்கு நல்லையில் பெருவிழா

## (நல்லூர் ஸ்ரீ கைலாசநாத சுவாமி தேவஸ்தான மார்கழி மஹோற்சவம்)

**பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன்**

**தலைவர், சமஸ்கிருதத்துறை, யாழ் பல்கலைக்கழகம்**

யாழ்ப்பாணத்து நல்லூரில் கல்வளவு எனும் பதியில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவாலயமே நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாத சுவாமி தேவஸ்தானம் எனும் நல்லூர் சிவன் ஆலயம் ஆகும்.

இவ்வாலயம் 1916.06.26 அன்று நல்லூர் பிரம்மஸ்ரீ. நா.வே. கார்த்திகேயக்குருக்களால் ஸ்தாபிக்கப்பட்டதாகும். கைலாசநாத சுவாமியும், கமலாம்பிகை அம்பாளும் சமமான சந்நிதானமாகவும் சிவபெருமானுக்கு வலப்புறம் அம்பிகை நித்ய கல்யாண தோற்றத்திலும் விளங்குவது சிறப்பம்சமாகும். இவ்வாலயத்தின் வரலாற்றினை “ஸ்ரீ கைலாசநாதர் புராணம்” எனும் தலபுராணம் சிறப்புற எடுத்தாளுகின்றது. ஆயிரத்து அறுநூறு விருத்தப் பாக்களில் பதினேழு சருக்கங்கள் கொண்ட இப்புராணம் வட்டுக்கோட்டை பிரம்மஸ்ரீ நா. சிவசுப்பிரமணிய சிவாச் சாரியாரால் இயற்றப்பட்டதாகும். இத்தலத்தில் தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெற்று வரும் அதேவேளை வெள்ளிக்கிழமை தோறும் சிவனுக்கு ஏக கலச ஸ்நபன அபிஷேகமும் அம்பாளுக்கு பாரம்பரிய முறைப்படி செவ்வாய், வெள்ளி இரு தினங்களிலும் ஸ்ரீ சக்ரபூஜையும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

பூ பிரஸ்தாரம், கைலாச பிரஸ்தாரம், மேரு பிரஸ்தாரம் எனும் மூவகை ஸ்ரீ சக்ரங்களும் இவ்வாலயத்தில் காணப்படுகிறது. பிரதோஷ காலங்களில் மாலை சிவனுக்கு நவகலச ஸ்நபனகும்ப அபிஷேகமும் விசேட சோடச உபசார பூஜைகளுடன் உற்சவமும் நடைபெறும் அதேவேளை, அம்பாளுக்கு பௌர்ணமி தினங்களில் மாலை நவகலச ஸ்நபன கும்ப அபிஷேகமும் ஸ்ரீ சக்ர பூஜையும் நடைபெறும் மரபு தொன்றுதொட்டு காணப்படுகிறது.




படம் : ஐ. சிவசாந்தன்

மஹா சிவராத்திரியன்று நான்கு காலமும் அபிஷேக பூஜைகளும் கார்த்திகை சோமவார அபிஷேக உற்சவங்களும் திருவெம்பாவைக் கால மஹோற்சவமும் சிறப்புடையன. சாரதா நவராத்திரி காலத்தில் நடைபெறும் தச சண்டீ ஹோமமும் விசேட அபிஷேக ஆராதனைகளும் ஸ்ரீ சக்ரபூஜை, நவாவர்ண ஹோமம், லட்சார்ச்சனை என்பனவும் தனிச் சிறப்புடையன.

ஐப்பசி மாத இறுதி வெள்ளிக்கிழமையில் இயம சம்ஹார உற்சவம் இவ்வாலயத்தில் தொன்றுதொட்டு நடைபெறுகின்றது. அதுபோல இவ் ஆலய மஹோற்சவ காலத்தில் அட்டவீரச் செயல்கள் உணர்த்தும் உற்சவங்களும் சிறப்புடையன. இவற்றை இத்தல புராணத்திலும் சிறப்பாக குறிப்பிடப்பட்டிருக்க காணலாம்.

இத்தகைய தனித்துவமான மரபுகளுடைய இவ்வாலயத்தில் இவ்வருடம் 24.12.2017 திருவெம்பாவை ஆரம்ப நாளன்று துவஜாரோகணமாகி பதினொரு நாட்கள் மஹோற்சவம் நடைபெற உள்ளது. 02.01.2018 திருவாதிரை நாளன்று அதிகாலை ஆர்த்திரா அபிஷேகமும், தர்சனத்தை தொடர்ந்து ரதோற்சவமும், திருவூடல், ஆர்த்திரா தீர்த்த சங்கிரஹணம் என்பனவும் இடம்பெறவுள்ளன. மறுநாள் 03.01.2018 அன்று பகல் தீர்த்தமும் மாலை த்வஜாவரோஹணமும் நிகழ இருக்கின்றது.

இவ்வுற்சவ காலங்களில் 24.12.2017 அன்று மாலை சிறப்பாக விக்னேஸ்வரனுக்ரஹ தர்சனமும் 25.12.2017 அன்று சந்திரசேகர பட்டமும், 26.12.2017 அன்று பிரம்ம சிரச்சேத உற்சவமும் 27.12.2017 அன்று சிவபக்த உற்சவமும் 28.12.2017 அன்று ம்ருத்யுஞ்ஜய உற்சவமும் 29.12.2017 அன்று பிக்ஷாடன உற்சவமும் 30.12.2017 அன்று கைலாச வாகன உற்சவமும் 31.12.2017 அன்று ம்ருகயாத்ரா உற்சவமும் 01.01.2018 அன்று சப்பர உற்சவமும், 02.01.2018 அன்று நடராஜ மூர்த்தியின் ஆனந்த நடன தர்சனமும் 03.01.2018 அன்று சண்டேசானுக்ரஹ தர்சனமும் 04.01.2018 அன்று திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறும்.

மார்கழித் திருவெம்பாவையின் பத்துத்தினங்களையும் உற்சவமாக கொண்ட மரபில் ஆறாம் நாட்காலை பிட்டுக்கு மண் சுமந்த உற்சவமும் இந்நாட்களில் தினமும் திருவாசக முற்றோதலும் நிகழ இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாதசுவாமியின் மஹோற்சவ காலத்தில் பஞ்ச கிருத்தியங்களையும் உணர்த்தும் உற்சவச் சிறப்பினை அனைவரும் தரிசித்து இகபர சுகங்களை பெற்றுய்வீர்களாக.

'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

*திருவளரிலங்கை யோங்கித்*
*திகழும் யாழ்ப்பாண நல்லூர்க்*
*கரு வளந் தோங்கத் தேங்குங்*
*கல்வள வாலயத்தி*
*லுருவளர் கார்த்திகேய யோகி*
*உத்தம தியானப்*
*பொருள் கைலாயநாத*
*பூரணர்க் கன்பு செய்வாம்.*

–[கைலாசநாதபுராணம் – ஸ்தலபுராணம்]

**திருக்குடவாயில் கூத்தன் (மயிலணி சிவன் கோயில்)**

நடராஜப் பெருமானே மூலஸ்தானத்தில் (கருவறையில்) காட்சி தரும் அழகான ஆலயம் சுண்ணாகம் மயிலணி விசாலாட்சியம்பிகா சமேத விஸ்வநாதசுவாமி கோயிலாகும். முருகப்பெருமானால் பூசிக்கப்பட்டதான ஐதீக கதையுடைய தொடர்புடைய இத்தலம் மயிலணியில் வாழ்ந்த கௌண்டின்ய குல திலகரான பிரம்மஸ்ரீ. கார்த்திகேய குருக்களால் மேற்றிசை நோக்கி தற்போது ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.



வில்வமரத்தை தல விருட்சமாகவும் சிவ கங்கையை தீர்த்தமாகவும் கொண்ட இத்தலம் திருக்குடவாயில் என்றும் அழைக்கப்படுவதுடன் இத்தல மூலஸ்தான ஸ்தூபி நடராஜப்பெருமானுக்குரிய கனகசபை ஸ்தூபி போன்றே உருவாக்கப்பட்டுள்ளது. வைகாசி மாதத்தில் மஹோற்சவமும் ஐப்பசிக் கடைசி வெள்ளிக்கிழமை யமசங்கார உற்சவமும் சிறப்பாக நடைபெறும் இத்தலத்தில் இந்த ஆண்டு 01.01.2018 (ஆங்கில புத்தாண்டன்று) திருவெம்பாவை 9ஆம் நாளில் வழமை போல ஆனந்த நடராஜருக்கு மஹாரத உற்சவம் நடைபெறவுள்ளது.

பிரதோஷ காலத்தில் நந்திதேவரின் கொம்புகளின் நடுவே நடேசப் பெருமானை இங்கு தரிசிக்க முடிவது தனித்து வமானது. நாமும் குடவாயில் கூத்தனை கொண்டாடுவோம்.

# ஏல் - ஓர் - எம் - பாவாய்

**பேராசிரியர் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்**
முன்னாள் ஆய்வுப் பேராசிரியர்,
கக்சுயின் பல்கலைக் கழகம், தோக்கியோ, ஜப்பான்.

மார்கழி மாதம் மழை பொழியத் தொடங்கி விட்டது. கொட்டும் மழையும் குளிரும் மாரிகாலத்தைக் காட்டி நிற்கின்றன. மனிதர் வாழ்க்கையில் மழையால் வளம் பெருகும். மழை உரிய காலத்தில் பொழியாவிட்டால் எல்லா உயிரினங்களும் இடர்ப்பட நேரிடும். எனவே மழையை வேண்டி இயற்கையை பணிந்து மனிதன் வழிபட மார்கழி நீராடல் வழிபாட்டு நடைமுறையாயிற்று. பெண்கள் பண்டுதொட்டு மார்கழி நீராடல் செய்வது ஒரு வழக்கமாக இருந்தது என்பதைப் பழைய தமிழ் இலக்கியங்கள் விரிவாய் விளக்கவில்லை. சங்க காலப் பாடல்கள் சிலவற்றில் சில குறிப்புகளே காணப்படுகின்றன. தைநீராடல், அம்பா ஆடல் எனக் குறிப்பிடப்படும் நீராடல் முறைகள்தான் பின்னர் மார்கழி நீராடலாக அமைந்தது எனக் கருதப்படுகின்றது.

முதன்முதலில் இந்த மார்கழி நீராடல் பற்றிய நடை முறையை ஆவணப்படுத்திய பெருமை ஆண்டாளைச் சாரும். ஆண்டாள், தான் பாடிய திருப்பாவையில் முப்பது பாடல்களிலே இந் நடைமுறையினை விளக்கியுள்ளார். பாடல்களின் இறுதித் தொடர் அமைப்பு அவருடைய நோக்கத்தைச் சுட்டிநிற்கின்றது. "ஏலோரெம்பாவாய்" என்னும் இத்தொடர் ஆண்டாளின் கூர்மையான அறிவைக் காட்டி நிற்கின்றது. வழிபாட்டு நடைமுறை ஒன்றை வருங்காலத்தவர்க்கு ஆண்டாள் பயிற்ற எண்ணி உள்ளார். மனித வாழ்வியலிற் கலந்திருந்த ஒரு வழிபாட்டு நடைமுறையையும் அதன் நோக்கத்தையும் ஆண்டாளின் திருப்பாவைப் பாடல்கள் தெளிவாக விளக்கியுள்ளன. எனினும் ஆண்டாளின் திருப்பாவைப் பாடல்களை பாவைப்பாட்டு எனக்கொண்டு அக்காலப் பாமர மக்களுடைய நாட்டுப் பாடலெனக் கருதுவோரும் உளர். ஆனால் ஆண்டாள் தன்னுடைய காலத்து வழிபாட்டு நடைமுறை ஒன்றினை நம்பிக்கையோடு கடைப்பிடித்தவர். கண்ணனையே தனது கணவர் ஆக எண்ணி அவனை அடைய வேண்டி மார்கழி நோன்பு நோற்றவர். நோன்பு நோற்கும் பெண்கள் ஒருவரையொருவர் வீடு வீடாகச் சென்று துயிலெழுப்பி விடிகாலையிலே நீராடச் செல்லும் வழக்கத்தை மனிதர்கள் எல்லோரும் கடைப்பிடிப்பது நன்று என ஆண்டாள் எண்ணியுள்ளாள். அதனால் அவ்வாறு பெண்களைத் துயிலெழுப்பும்போது பரிமாறப்படும் செய்திகளைப் பாடல் வடிவில் அமைத்துள்ளார். பாடலின் இறுதித் தொடரில் ஏல்-ஓர்- எம் - பாவாய் எனப் பிரிந்து அமைவது ஒரு நல்ல கருத்துப்பரிமாற்ற முறைமையைக் காட்டுகின்றது. ஏல் - ஏற்றுக் கொள் - ஓர் - எண்ணிப்பார், எம் - எம்மைச் சார்ந்த, பாவாய் - பெண்ணே. "நான் கூறும் இக்கருத்துக்களை நீ ஏற்று, அதாவது செவியிலே ஏற்று, எண்ணிப் பார்த்துப் பின் முடிவு செய். எம் கூட்டத்தைச் சேர்ந்த பெண்ணாக இருந்தாலும் நீ கருத்து வேறுபாட்டைக் கொண்டிருக்கலாம். எனவே உன் குழப்ப நிலையிலிருந்து தெளிவுபெற வேண்டி நாம் உணர்ந்தவற்றை உனக்குக் கூறுகின்றோம்" என்றே ஆண்டாள் விளக்கந் தந்துள்ளார்.

இன்று திருப்பாவைப் பாடல்கள் சம்பிரதாய முறைப்படி பாடப்படுகின்றன. மார்கழி மாதத்தில் வைணவ ஆலயங்களிலே ஓதப்படுகின்றன. முப்பது பாடல்களையும் ஓத முடியாவிட்டால் "சிற்றஞ் சிறுகாலை" என்னும் 29ஆம் பாடலை மட்டும் ஓதினால் நன்று என்று கருதப்படுகின்றது. ஆனால் வழிபாட்டு நடைமுறை என்ற நிலையில் ஆண்டாளின் திருப்பாவையை நாளும் கேட்பதே நல்லது. ஆண்டாள் பாடல்களின் அமைப்பை நோக்கும்போது முதற் பாடலிலேயே சுருக்கமாகத் தன் முழு நோக்கத்தினையும் கூறியிருப்பதனை உணரமுடிகின்றது.

*"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்நாளால்*
*நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்*
*சீர்மல்கு ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்*
*கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்*
*ஏரார்ந்த கன்னி யசோதை இளஞ்சிங்கம்*
*கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்*
*நாராயணனே நமக்கு பறைதருவான்*
*பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்"*

இப்பாடலில் நோன்புக்கு உரியவர்கள் இளஞ்சிறுமிகள், நோன்புக்கு உரிய காலம் மார்கழி மாதம். நோன்பின் தொடக்க நாள் நிறைநிலவு நாள். நோன்பினால் அடையும் பலன் நாராயணனைச் சேர்தல் என ஆண்டாள் குறிப்பிட்டுள்ளார். பிற்காலத்தில் மார்கழி நோன்பின் நோக்கம் நல்ல கணவரைப் பெறுதல் என விளக்கங் கொடுப்பதற்கும் இந்த முதலாவது பாடலே காரணமாயிருந்தது போலும். நெய்யுண்ணாமல் பாலுண்ணாமல் நாட்காலையில் நீராடி மையிட்டு எழுதாமல் மலரிட்டுக் கூந்தல் முடியாமல் செய்யாதன செய்யாமல் தீமைதரும் கோள் சொல்லாமல் அன்னக்கொடை செய்து நோன்பு நோற்றதை ஆண்டாள் பாடியுள்ளார். பெண்களின் வாழ்வியலில் மார்கழி நோன்பு எவ்வாறு இணைந்திருந்ததென்பதைத் திருப்பாவைப் பாடல்கள் தெளிவாக கூறுகின்றன. பெண்மையின் குண இயல்புகளை எல்லோரும் அறியக்கூறி மீண்டும் துயில் எழுப்புகின்றாள். திருப்பாவையின் முப்பது பாடல்களில்

ஆறாவது பாடல் தொடக்கம் பதினைந்தாவது பாடல் வரை இத்தகைய பெண்ணின் வேறுபட்ட குண இயல்புகளே கூறப்பட்டுள்ளன.

எனவே, திருப்பாவை ஒருகாலத்துப் பெண்களின் வாழ்வியல் நடைமுறைகளை அக்காலத்துப் பெண்ணொருத்தியே வருங்காலப் பெண்களுக்குப் பயிற்றுவதாக அமைந்தது எனக் கருதமுடிகின்றது. பெண்களின் வழிபாட்டு நடைமுறைகள் அவர்களைச் சார்ந்தோர்களையும் அவர்கள் வாழும் சமூகத்துமக்களையும், நன்னிலைப்படுத்தும் என்பதை ஆண்டாள் அனுபவ வாயிலாக அறிந்திருந்தார். திருப்பாவையின் 29ஆவது பாடலில் பெண்களின் வழிபாட்டின் அடிப்படையாக அமையும் இறைபக்தியைக் குறிப்பிட்டுள்ளார்.

*"எற்றைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் உன்தன்னோடு*
*உற்றோம் ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்*
*மற்றை நம் காமங்கள் மாற்றுஏல் ஓர் எம்பாவாய்;*

இறைவழிபாட்டிலே பெண்கள் முழுமையாக ஈடுபட வேண்டும் என்னுங் கருத்தையே ஆண்டாள் தன்னுடைய திருப்பாவைப் பாடல்களிலே செறியவைத்துள்ளார். இறைவனுக்கு மட்டுமே பணிந்து வாழ வேண்டுமென்ற ஆண்டாளின் உயர்ந்த கருத்தைத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியாதவர்கள் உலகியல் வாழ்விலே நல்ல கணவனை அடையவேண்டும் என்னும் நோக்கத்திற்காகப் பெண்கள் மார்கழி நோன்பு நோற்பதாக விளக்க முற்படுகின்றனர். இதற்கு ஆண்டாளுக்குப் பின்னர் திருவெம்பாவை பாடிய மாணிக்கவாசகரும் ஒருவகையில் காரணமாகின்றார்.

மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவை ஆண்டாளின் திருப்பாவைப் பாடல்களை அடியொற்றியே பாடப்பட்டுள்ளது. ஆனால் பாடல்களின் எண்ணிக்கை இருபதாக அமைந்துள்ளது. ஆண்டாள் வைணவ வழிபாட்டைப் பாட மாணிக்கவாசகர் சிவ வழிபாட்டைப் பாடுகின்றார். பெயர் நிலையிலும் அவை முறையே திருப்பாவை திருவெம்பாவை என அழைக்கப்படுகின்றன. மாணிக் கவாசகர் தம்முடைய பாடல்களிலே இரண்டு நோக்கங்களை உட்கிடையாக்கியுள்ளார். ஒன்று மழையை வேண்டிப் பாடுவது, மற்றது, இறைவனடியாரோடு வாழவேண்டிப் பாடுதல், திருவெம்பாவையின் 19ஆவது பாடல் ஆண்டாள் காட்டிய பெண்கள் வாழ்வியலையே காட்டுகின்றது.

*"எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம் கேள்*
*எங்கொங்கை நின் அன்பர் அல்லாதோர் தோற்சேரற்க*
*எம்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க*
*கங்குல்பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க*
*இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்*
*எங்கெழிலென் ஞாயிறு எமக்கு ஏல்ஓர் எம்பாவாய்"*

இறைவனைப் பணிந்து வாழ்பவருடனே தம் வாழ்வைப் பெண்கள் இணைத்துக்கொள்ள வேண்டும் என்பதையே ஆண்டாளும் மாணிக்கவாசகரும் தமது பாடல்களிலே கூறிச்சென்றுள்ளனர். மனித வாழ்வுக்கு வழிகாட்ட வல்லது இறை அன்பே. இறைவனைப் பணிந்து வாழும் பயிற்சியை எல்லோருக்கும் கொடுக்க வேண்டியது பெண்களுடைய கடமை என்பதையே திருப்பாவையும் திருவெம்பாவையும் விளக்கியுள்ளன.


எமது எதிர்காலத் தலைமுறையினர்க்கு நல்வாழ்க் கைக்கான பயிற்சியை நாம் தாய்மை உணர்வுடன் அளிக்கவேண்டியுள்ளது. மாணிக்கவாசகர் இறைவன் தாயினும் சாலப் பரிந்து தன்னை ஆட்கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். தாய் தன்னுடைய குழந்தையின் பசி நேரத்தை முன்கூட்டியே கணித்து உரிய நேரத்தில் பாலூட் டுகிறாள். அவளுடைய அத்தகைய பரிவினைக் காட்டிலும் மேலான பரிவுடன் எம்மை இறைவன் கண்காணிக்கிறார். இந்த அன்புநிலையை முழுமையாக மாணிக்கவாசகர் உணர்ந்திருந்தார். தன்னுடைய தீவினைகளையெல்லாம் அகற்றி வற்றாத ஆனந்தமாய தேனினைச் சொரிந்த சிவனை அவர் கண்டுகொண்டமையால் அந்த உண்மையனுபவத்தைப் பாடல்களாக வடிக்க முடிந்தது. இத்தகைய அனுபவ நிலையை அடைவதற்கு நமது வாழ்வியல் நடைமுறைகளில் இறை உணர்வு மிகுந்திருக்க வேண்டும். இதற்கான பயிற்சியை தாய்தான் ஊட்டமுடியும். எனவேதான் பெண்மையின் சிறந்த குணவியல்பான தாய்மைப் பண்பு மனித வாழ்க்கைக்கு இன்றியமையாததாயிற்று. வழிபாட்டு நடைமுறைகளைப் பேணி எதிர் காலத்தவரும் அதையுணர பயிற்றுகின்ற ஆற்றல் பெண்களிடமிருந்தே வெளிப்படவேண்டும் என்ற இலக்குடனேயே மாணிக்கவாசகர் திருவெம்பாவையைப் பாடியுள்ளார். ஆண்டாள் காட்டிய வழியிலே சென்று பெண்களின் வழிபாட்டு நடைமுறையினைப் பாடல்களிற் பதிவு செய்துள்ளார். எனவே மாணிக்கவாசகருக்கு ஆண்டாள் ஒருவகையில் வழிகாட்டியாய் அமைந்துள்ளார் எனலாம். எனினும் மாணிக்கவாசகருடைய திருவெம்பாவைப் பாடல்களின் தொகை ஆண்டாளின் திருப்பாவைப் பாடல்களின் தொகையுடன் வேறுபட்டுள்ளது. இதற்கு ஒரு காரணத்தைக் கூற முடியும். இளம்பெண்கள் வழிபாட்டு நடைமுறைகளைத் தொடர்ச்சியாக இருபது நாட்கள்தான் கடைப்பிடிக்க முடியும். அதனால் இருபது பாடல்களாகத் திருவெம்பாவை அமைந்தது எனலாம். ஆனால் ஆண்டாளுடைய முப்பது பாடல் இக்கருத்தை மாற்றுகின்றது. முப்பது நாட்கள் பெண்கள் தொடர்ச்சியாக வழிபாடு செய்ய முடியும் எனக் காட்டுவதாயும் உள்ளது. இன்னும் ஆண்டாள் காலத்திலே முப்பது என்னும் தொகை ஒரு திங்களின் அளவைக் குறித்து நின்றது போலும். மார்கழித் திங்களின் மதிநிறைந்த நன்னாளில் ஆண்டாள் காலத்துப் பெண்கள் மார்கழி நோன்பைத் தொடங்கி முப்பது நாட்கள் கடைப்பிடித்துள்ளனர். ஆண்டாளின்

பாடல்கள் நோன்புக் காலத்தைக் கணித்துக் காட்டியுள்ளன. பாவைப்பாட்டு என்பது ஒரு பொழுது போக்குப்பாடல் அன்று. அக்காலத்து வாழ்வியல் நடைமுறைகளைப் பிற்காலத்தவரும் அறியும் வண்ணம் வாய்மொழியாகச் செய்யப்பட்ட இலக்கிய ஆவணம். காலத்தின் தேவை கருதி இது எழுந்தது. ஆண்டாளின் திருப்பாவையும் மாணிக்கவாசகரின் திருவெம்பாவையும் ஓராண்டு கால வழிபாட்டு நடைமுறைகளை மார்கழி மாதத்தில் மக்கள் மனங்கொள்ள வேண்டிப் பாடப்பட்டவை. அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் வழிபாட்டுப் பயிற்சி பெண்களால் செய்யப்படவேண்டும் என்பதை உணர்த்துபவை. இன்றுவரை மார்கழி மாதம் முழுவதும் திருப்பாவைப் பாடல்கள் வைணவக் கோயில்களிலே ஓதப்படுகின்றன. தாய்மை உணர்வுடன் இறைவழிபாட்டை எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டி மார்கழி நோன்பு மக்களால் சிறப்பாகப் பெண்களால் கடைப்பிடிக்கப்படுகின்றது. கால ஓட்டத்தைக் கருத்தில் கொண்டு மனித வாழ்வியலைச் சீரமைக்க மார்கழி நோன்பு வழிபாட்டு நடைமுறையாயிற்று. திருப்பாவையும் திருவெம்பாவையும் ஊரெங்கும் ஒலிக்கத் தொடங்கிற்று.

**– நன்றி –**
**நல்லைக்குமரன் மலர்**

## ஈழத்துச் சிதம்பரத்தில் ஆனந்த தாண்டவம்

**“கோயில் என்ற தனிச் சிறப்புடன் திகழும் தில்லைச் சிதம்பரத்தில் அல்லும் பகலும் அநவரதமும் ஆடிடும் கூத்தப் பெருமானின் திருவருட் குறிப்பின்படி அத்திருத்தலத்திற்கு அண்மையிலிருந்து கொண்டுவரப்பெற்ற சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப் பெற்றுள்ளமை; தில்லைப் பதியிலே அழகான சோமஸ்கந்த மூர்த்தி வார்க்கப்பட்டு எடுத்து வரப்பெற்றமை; – கூத்தப்பிரானுக்குரிய அபிஷேக ஆராதனைகள், தில்லைச் சிதம்பரத்தைப் பின்பற்றி நிகழ்த்தப்பெறுகின்றமை தில்லைக்கு வந்து என்னைத் தரிசிக்க முடியவில்லையே எனக் கவலைப்படவேண்டாம். காரைநகர்த் திண்ணபுரத்துச் சிவாலயத்தில் என்னைத் தரிசிக்கலாம்” எனச் சில அடியார்களின் கனவிலே தில்லைக் கூத்தன் தோன்றியருளியமை போன்ற தெய்வீகக் காரணங்களால் “ஈழத்துச் சிதம்பரம்” என்ற தனிச்சிறப்புக்கு இலக்காகியுள்ள காரைநகர்த்திண்ணபுரம் சௌந்தராம்பிகை உடனுறை சுந்தரேஸ்வரப்பெருமானின் திருக்கோவிலில் 24.12.2017 ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும். திருவெம்பாவைத் திருவிழா மிகச் சிறப்பாகத் தொடர்ந்து நடைபெற உள்ளது. 01.01.2018 திங்கட்கிழமை பஞ்சரத பவனியும், 02.01.2018 செவ்வாய்க்கிழமை அதிகாலை வசந்த மண்டபத்திலே கூத்தப்பிரானுக்குரிய ஆர்த்ராபிஷேகமும் அன்று பிற்பகலில் நடராஜப்பெருமானின் வீதியுலாவும் தீர்த்தோற்சவம் முதலியனவும் நடைபெறவுள்ளன.**



***வானவர் தானவர் வையகத் தோரெலாம்***
***வருமீழச் சிதம்ப ரத்தில்***
***ஆனந்தத் தாண்டவம் ஆடிடும் வேந்தருக்(கு)***
***ஆதிரை நன்னா ளிலே***
***தேனுடன் பால் தயிர் செவ்விளநீர், கனி***
***திருநீறு சாந்து பன்னீர்***
***வானிழி கங்கையாய்ச் சொரிந்திடும் காட்சியின்***
***மாண்பினை மாந்தி உய்வோம்.***



**– சிற்பி**

**வாசகர் கவனத்திற்கு :**

இந்து சாதனம் – Hindu Organ இருமொழி மாத பத்திரிகையின் மீள் வருகை கண்டு மகிழ்ந்து நீங்கள் எழுதிய கடிதங்கள் எமக்கு ஊக்கமும் மகிழ்வும் தருகின்றன. தொடர்ந்தும் தங்கள் கருத்துக்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வையுங்கள். .

தாங்களும் தங்களுக்கு எமது இந்து தர்மம் – ஆன்மீக வாழ்வு தொடர்பான சந்தேகங்களை தங்கள் பெயர், முகவரியோடு எழுதி அனுப்பினால் தகுந்த அறிஞர்கள் மூலம் அதற்கான பதில்களை பெற்று பிரசுரிப்போம்.

நூற்றாண்டுப் பழமை மிக்க இப்பத்திரிகையின் தொடர் வரவு, தங்களின் கைகளிலும் கரிசனையிலுமே உள்ளது என்பதையும் ஞாபகமூட்ட விழைகிறோம். ஆண்டுச் சந்தாதாரராக இணையவும் வேண்டுகிறோம். இந்த இதழில் நடராஜருக்கு முதன்மை தரும் திருவாதிரைத் தலங்களாக ஐந்து ஈழத்து நடேச ஆலயங்கள் குறித்த குறிப்புகளை இணைத்துள்ளோம். இந்த ஐந்து ஆலயங்களும் கிழக்கு முதலிய நாற்றிசைகளையும் நோக்கியுள்ளமை தனித்துவமாக அவதானத்திற்குரியதாகும்.

**– ஆசிரியர்**
**இந்து சாதனம் – Hindu Organ**

# ஆறுமுகநாவலர் பற்றி அறிஞர்கள் குறிப்பிடும் சில அபூர்வச் செய்திகள்

**பண்டிதர் பொன்னம்பலவாணர்**
பொன்னாலை

ஆறுமுகநாவலர் வரலாற்றை அவர் காலத்தில் வாழ்ந்த வே. கனகரத்தின உபாத்தியாயரும் நாவலர் மருகரான கைலாசபிள்ளையும் எழுதியுள்ளனர். இவர்கள் இருவர் வரலாற்றையும் நாவலர் சாதனைகளையும் விளக்கியும் ஆராய்ந்தும் பலர் நாவலர் பற்றி எழுதியுள்ளனர். இப்படியான சந்தர்ப்பங்களில் அறியப்படாத பல நாவலர் சிறப்புக்கள் நாவலர் சிவபதம் அடைந்தபொழுது அக்காலப் பெருமக்கள் பாடிய இரங்கற் பாடல்களில் உள்ளன. அவற்றை அறிவதும் நாவலர் பெருமானிடம் ஈடுபாடும் மதிப்பும் வணக்கம் உண்டாக உதவும்.

சி.வை. தாமோதரம்பிள்ளை, உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், நீர்வேலி சிவப்பிரகாச பண்டிதர் முருகேசப் பிள்ளை, ஆவரங்கால் நமச்சிவாயபிள்ளை, சுன்னாகம் அ. குமாரசுவாமிப்பிள்ளை (புலவர்), ஊரெழு சரவணமுத்துப் பிள்ளை, மல்லாகம் சி. செந்திநாதையர், கொக்குவில் ச. சபாரத்தினபிள்ளை, திருநெல்வேலி க. வேலுப்பிள்ளை, ஸ்ரீமத் திருநெல்வேலி தண்டபாணி சுவாமிகள், நாவலர் மருகன் ச. பொன்னம்பல பிள்ளை ஆகியோரின் இரங்கற் பாக்கள் கனகரத்தின உபாத்தியாயரின் நாவலர் சரித்திரப் புத்தகத்தில் உள்ளன.

இப்பாடல்களில் நாவலர் சரித்திரங்களில் விளக்கப்படாத பல குறிப்புக்கள் உள்ளதை அவதானித்து மகிழக்கூடியதாக உள்ளது. சிவசம்புப் புலவர் நாவலர் பற்றி விரிவான தெளிவான செய்திகளைக் குறிப்பிட்டிருக்கிறார். எழுபத்திரண்டு சீர்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஒன்றும் பன்னிருசீர்கழிநெடிலாக ஆசிரிய விருத்தம் ஒன்றும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் மூன்றும் கட்டகலிக் கலித்துறை ஐந்தும் சிவசம்புப் புலவரால் பாடப்பட்டி ருக்கின்றன.

பிற புலவர்களின் இரங்கற் பாக்களிலும் பார்க்க இவரது பாடல்களால் நாவலர் பெருமை தெளிவாக்கப்பட்டிருப்பதாக சி.வை. தாமோதரம்பிள்ளை திருப்திப் பட்டதாக ஒரு செய்தி உண்டு. இச் செய்திக்கு ஆதாரமான நிலையில் நாவலர் பற்றி பல ஆதாரமான குறிப்புக்கள் இடம்பெற்றிருக்கின்றன.

மதுரைத் தமிழ்ச்சங்கம் மூன்றும் இங்கு ஒன்றான பெரிய சங்கம் - சம்ஸ்கிருத பாஷா வியாகரண சித்தாந்த தர்க்க வேதாந்த நிலையம் - சகலசாத்திரசாகரம் - நன்மாணவகர் கோயிலில் வளர்ந்திடும் சேமவைப்பு - பசிப்பிணிக்கு அறுசுவை உணவு தினம் வழங்கிடும் காமதேனு - வள்ளன்மை ஒழியாத இராசப்பிரபு வந்திருப்பவர் குறைகளுக்கு முன் வேண்டுவ மகிழ்ந்துதவு பாரிசாதம் - கமை அறிவு அடக்க முதலாம் சிகரமுடன் எழுதும் கனகசுகுண மாபூதரம் - காவலர்கள் ஏனையவர்கள் காணிக்கையோடு நிதங் கைதொழும் தேவாலயம் - தேசாபிமானமும் சமயாபிமானமும் சிதையாமல் வாழ்ந்த வாழ்வு - சேர்ந்தவர் செயும் குறை அன்றே மறந்திடும் சித்தசுத்தித்தயாளு- சிற்யும் பலத்தோடு மானந்த நாடகதியான புண்ணியர் - வாழ்வெனும் மயல்சாகரம் தப்பி மிடியில் தளராது அடகநிறை வாய்மை கொடையாதிய தழீகு... ஓங்குபுகழ் ஆறுமுகநாவலர் பெற்ற உயர்வு ஒரு சேர யார்க்குமிலையே...

என்பன போன்ற சுவையும் புதுமையான கருத்துக்கள் சிவசம்புப் புலவரால் அறியவுள்ளன.

கும்பகோணம் பூ. முருகேசப்பிள்ளை மாமிக்குள் கொண்ட மருகிக் குஞ்சண்டையை மாற்றி இந்தப் பூமிக்குட் கல்வியும் செல்வமும் சேரப் (பெற்ற)புலவரெவர் என்று நாவலர் தன்மையை வியக்கின்றது.

நாவலர் நோயுற்றிருந்த வேளையில் படுத்திருப்பார். அவர் கேட்கும்படி திருமுறை ஓதும் செயல் நிகழ்ந்திருக்கின்றது. அப்போது உறக்கத்தாலோ மயக்கத்தாலோ திருமுறை கேட்கும் நிலையில் அவர் இல்லை எனக் கருதி திருமுறை ஓதலை நிறுத்தியபோது நிறுத்தாமல் ஓதும்படி “இம்” என்று பணித்திருக்கின்றார். அதன்படி திருமுறை ஓதியவேளை அவர் உயிர்பிரிந்திருக்கின்றது என்ற நாவலர் சரித உண்மையை ஆவரங்கால் நமச்சிவாயபிள்ளை

*“பின் உடல் விடுநாள் இன்படை அருட்பா*
*ஓதுவார் ஓய “இம்” எனும் குறிப்பிற்கை காட்டிப்*
*பின்பு மோதச் செய்து உடன் அகன்றாய் இப்பெரும்*
*குறிப்பறிந்திலேன் குருவே”*

எனப் பாடியிருக்கிறார்.

நாவலர் பெருமான் சிவபூசை செய்யும் இயல்பை

*“தேவார திருவாசகங்கள் ஓதிச் சிவபெருமான் ஒண்கழற் செம்போதை நினைந்து உள் எம் நெக்கு நெக்கு உருக ஓட்டந்துடிது துடிப்புக் கொள்ள உடம்புகுறு வேர்வை – வெள்ளமெனக் கண்ணீர் சொரிய ஆனந்தமுற்றே யயர்த்தும் பரவசமாய் மோனச்சிவ நூன் முறைப்படியே செய்யும் சிவபூசைச் செல்வா”*

என்று சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் பாடியிருக் கிறார். அவர் தொடர்ந்து பாடும்பொழுது கண்ணே என

திரண்டு கண்மணியே நாவலனே மண்ணாதியாமுடம்பு மாய்ந்தாலும் எண்ணர் உன் கீர்த்தி உடம்பு கெடுமோ கிடைக் கும் உண்மை அரிச்சந்திரனே” என்று இரங்குகின்றார்.

திருநெல்வேலி க. வேலுப்பிள்ளை என்பவர் “திருவாளன் திருவைந்தெழுத்திடையாரு ஈதாவிக்கும் எழிற்திருவாக்கும் சற்குரு பாதங் கருதும் உளமும் விபூதி ஒளி தயங்கு மேனியும் .... திராவிட நின்மல மறை கொள்திருக்கரமும்” என்று குறிக்கின்றார். இக்கருத்துப் பிறர் இரங்கல்களிலும் உள்ளது. அவர் வரலாற்றின் இக்கருத்துக்கள் இவர்கள் வாக்குகள் தெளிவாக நிரந்தரமானதாக தெளிவுறுத்தப்படவில்லை என்பதை அவதானிக்கமுடிகின்றது.

நாவலர் மருகரும் வித்துவ சிரோமணியுமான ச. பொன்னம்பலபிள்ளையின் இரங்கலில் பிறரின் கருத்துக்கள் பல தெளிவாக்கப்பட்டிருப்பதோடு ஒரு அரிய புதிய கருத்தும் இடம்பெற்றுள்ளது. “உட்டெளிவுடைய பட்டணத்தடிகள் போல் அன்னையை அடிபணிந்து ஆதரித்திட்டோய்” என்னும் பகுதி உள்ளது. இக்கருத்தை வெளிப்படுத்தப் பூரணமான தகுதியும் உரிமையும் உடைய நாவலர் மருகரால் கூறப்பட்டிருக்கிறது, மிக்க மதிப்புடையதாயுள்ளது. எல்லா வகையிலும் நாவலர் குடும்பத் தொடர்புடைய விரும்பிய அதிகாரம் உடையவருமாகிய ஸ்ரீமத் கைலாசபிள்ளையால் எழுதப்பட்ட வரலாற்றில் இக்கருத்து பல நிகழ்வாதாரங்களுடன் தெளிவாக்கப்பட வேண்டிய கருத்து சுட்டப்படாமலே மறைந்திருக்கின்றது. தோள் கண்டார் தோளே கண்டார் என்பது போல் அவர் பார்வை அவர் மதித்த விடயங்களே தெரிந்திருக்கின்றது. நாவலரின் பூரண இயல்பு தெரிந்திருக்கமுடியவில்லை என்றே சமாதானப்படவேண்டியிருக்கின்றது.

கோபாலகிருஷ்ண பாரதியார் - சிவசம்புப் புலவர் ஆகியோரை நாவலர் கௌரவித்த விடயங்கள் போல் இன்னும் பலரை நாவலர் கௌரவித்திருப்பார் என்பதும் தன் கடமை வேலைகளுக்கிடையே வேண்டிய நேரத்தை ஒதுக்கி பஞ்சாட்சர செபம் - திருமுறைப் பாராயணத்தில் மிகக் கணிசமாக ஈடுபட்டிருப்பார் என்ற உண்மையும் பல இரங்கற் பாக்களில் இடம்பெற்றிருக்கின்றன.

சமுதாய ஒழுங்கு ஆகமவிதி என்ற அடிப்படைகளில் மிகக் கருரான ஒருவராக இருந்த போதும் இரக்கம் - மன்னிப்பு - கொடை - சிவபக்தி முதலிய விடயங்களில் நாவலர் பெருமான தலைசிறந்த உதாரண புருசராக இருந்திருப்பதை இவர் பற்றி இரங்கற் பாக்கள் தெளிவாக்குவதை அறிந்து ஆறுமுகநாவலரிடம் ஆராமைகொள்வது அவசியமும் நன்மையும் ஆனது என அறிவோம்.

## வாசகர்கள் பேசுகிறார்கள்

வணக்கம். ஓம் நமசிவாய.

மின்னஞ்சலில் இந்துசாதனம் கிடைக்கப்பெற்றது. மிக்க மகிழ்ச்சி. நான் யாழ் இந்துவில் படிக்கும் காலத்தில் இந்துசாதனம் அச்சேறுவதை தவறாமல் பார்த்திருக்கிறேன். இப்போது பார்க்கும்போது ஏதோ பழைய நண்பனை மீளப் பெற்ற உணர்வு ஏற்படுகிறது. அதனிலும் மேலாக எனது கல்லூரித் தோழனுக்கு அகவை அறுபது என அறியவும் முடிந்தது. அவர்தான் எமது கம்பவாரிதி இ.ஜெயராஜ்.

பிரசுரிக்கப்பட்ட அத்தனை கட்டுரைகளும் அற்புதம். அதிலும் புலம்பெயர் வாழ்வில் இருக்கும் என்போன்றவர்களின் ஏக்கப்பெருமூச்சைப் பிரதிபலிப்பதாக நீர்வை தி.மயூரகிரியின் தமிழரும் இந்துமதமும் என்ற கட்டுரை அமைந்திருந்தது. நற்பணிதொடர வாழ்த்துக்கள்.

*கோபிரமணா. நடனசபாபதிசர்மா*
*பிரான்ஸ்.*

நன்றி. பழமை வாய்ந்த இந்து சாதனம் அருமையான கருத்துக் களமாக வெளிவருவது கண்டு மகிழ்ச்சி. நிலம் உழப்படுகின்றது. விதைகள் தூவப்பட வேண்டிய தருணம். நம்மவர்கள் பங்களிக்க வேண்டும்.

*அன்புடன்*
*மருத்துவர் இ. லம்போதரன்,*
*கனடா.*

வாசிப்பதில் ஆர்வமில்லாதவர்களாக இன்று இளைஞர். யுவதிகள் இருக்கிறார்கள். எனவே அவர்களை உள்வாங்கும் வகையில் ஈர்க்குமாறு எளிமையாக இலகு நடையில் படங்களோடு கட்டுரைகளை எழுதுங்கள்.

பழைய காலம் போல தத்துவம் – சித்தாந்தம் என்று நின்று விடாமல் நடைமுறையோடு தொடர்புபட்ட விடயங்களை பகிருங்கள். சென்ற கார்த்திகை இதழில் ஐயப்பன் வழிபாடு பற்றி வந்த கேள்வி – பதில் என்னை மிகவும் கவர்ந்தது. இதுதான் இன்றைய தேவையாகும். முன்பக்க கட்டுரையும் மிகவும் நல்லது. ஆசிரியர் தலையங்கம் சிந்திக்க வைத்தது. ஆனால் நம் சைவம் இப்படித்தான் என்று குறுக்கி விடமுடியாது.

அதிபத்த நாயனார், கண்ணப்ப நாயனார் எல்லாம் என்ன செய்தார்கள்? ஆகமங்களில் பலியிடுமாறு சொல்லப்படவில்லையா? ஆகவே இவற்றுக்கு சட்டம் போடுவது சரியா என்று தெரியவில்லை என்பதே எனது எண்ணம். எப்பாடுபட்டாவது இளைஞர்களுக்குரிய இதழாக நடத்துங்கள். வாழ்த்துக்கள்.

*திருமதி மலர் கோணேசபிள்ளை*
*லோவர் றோட், உவர்மலை,*
*திருமலை*

# மனித மாண்பை மேம்படுத்துவோம் ஆதரவற்றோருக்கு தோள் கொடுப்போம்.

திரு.க.கணேசராசா
ஓய்வுநிலை ஆசிரியர்

மனிதனுக்குரிய உயர் பண்புகளான நேர்மை, நளினம், இரக்கம், பிறர் நலன் பேணல் போன்ற உயர் பண்புகளை உள்ளடக்கிய மனிதம் தொலைந்து அராஜகம், கொலைவெறி, ஆக்கிரமிப்பு, வாள்வெட்டுக் கலாச்சாரம் போன்றவை புனித பூமி என்று பேசக்கூடிய யாழ்ப்பாண தமிழ் மண்ணில் தலைவிரித்தாடுகின்ற ஒரு துன்பகரமான சூழ்நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

தமிழ் மண்ணில் முப்பது வருடகால யுத்தத்தின் அறுவடையாக மனித ஆளுமைகள் சிதைவடைந்து துயரம், இன்பம், தற்கொலை, மரணங்கள் அதிகரித்தல், அதீத மதுபாவனை, போதைப்பொருள் பாவனை போன்றவற்றால் திக்கு திசை தெரியாது சீரழியும் இளைஞர் சமூகம் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பணக்குவிப்பில் ஈவு இரக்கமின்றி ஈடுபடுகின்ற சந்தர்ப்பவாதக் கும்பல்கள் இவை எல்லாம் தமிழ் சமுதாயத்தை நிலை குலைய வைக்கின்றது.

தினசரி பத்திரிகைகளில் பக்கங்களை நிரப்புகின்ற மரணங்கள், விபத்துக்கள், அவற்றால் ஏற்படுகின்ற துன்பதுயரங்கள் ஒட்டு மொத்த சமுதாயத்தையே நிலைகுலைய வைக்கின்றன. போதாக்குறைக்கு தமிழ் மக்களின் துன்பதுயரங்களில் குளிர்காய நினைக்கும் அரசியல் வாதிகள் இவை எல்லாமே முழுச் சமுதாயத்தையுமே படுகுழியில் தள்ளுகின்றன. துன்பதுயரங்கள் தமிழ் மக்களின் தலைவிதியா என்ற தப்பபிப்ராயத்திலிருந்து மீள்வதற்கு ஒவ்வொருவரும் திடசங்கற்பம் பூண வேண்டும். நடைபெற்ற சம்பவங்களுக்கு இன்னொருவரை குற்றம் சாட்டி தப்பிக் கொள்வதிலிருந்து ஒவ்வொருவரும் தம்மை தாமே மாற்றி அமைக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளோம்.

“உன்னை திருத்திக் கொள், சமூகம் தானாகவே திருந்தும்” என்ற மகாத்மாகாந்தியின் பொன்மொழிகளுக்கமைவாக நம்மை நாமே சுயபரிசோதனைக்குட்படுத்த வேண்டும். தனிப்பட்ட நலனிற்காக வாழ்வது தவிர்க்க முடியாத அதே வேளையில் சமூகம் பற்றியும் சிந்திக்க வேண்டிய தார்மீக பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உண்டு. “உன்னைப்போல் உன் அயலவரையும் நேசி” என்ற அமுத வாக்கியங்களுக்கு ஏற்ப எம்மை நாம் நேசிப்பது போல நம் அயலவர்களையும் நேசிக்க வேண்டும். அவர்களின் துன்பதுயரங்களில் பங்கு கொள்வதுடன் எம்மாலான உதவிகளை அயலவர்களுக்கும் வழங்க வேண்டும். ஒட்டுமொத்த கூட்டு வாழ்க்கையே சிறந்த சமூக கட்டுக்கோப்பை உருவாக்குகின்றது.

இன்று ஆதரிப்போர் இன்றி தம் துயரங்களை வெளியிட முடியாத யாருமே அற்ற அநாதைகளாக ஒவ்வொரு மனித உள்ளமும் வெதும்புகிறது. நம்பிக்கையுடன் தமது வேதனைகளை கொட்டுவதற்கு யாரும் இல்லையென்ற நினைவு மனித மனங்களை றணங்களாக அறுக்கின்றன.

விளைவு தனிமை, விரக்தி போன்ற தாழ்வு சிக்கல்களுக்கு உள்ளாகி மரணத்தின் விளிம்புக்கே செல்கின்றனர். இந்நிலையில் ஆதரவற்றவர்களுக்கு கைகொடுக்க வேண்டி தார்மீக பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. அந்த வகையில் வயது முதிர்ந்தோருக்கு புகலிடம் வழங்கும் கைங்கரியத்தில் கைதடி முதியோர் இல்லம், செல்வசந்நிதியான் ஆச்சிரமம் ஆகிய அறநெறி நிறுவனங்கள் சிறப்புடன் செயற்படுகின்றன. அதுமட்டுமன்றி கோண்டாவில் சிவபூமி இல்லம்,நெல்லியடியில் இயங்கும் பரமானந்த ஆச்சிரமம் போன்றவை வழங்கும் சேவைகள் பெருமையுடன் நினைவு கூறத்தக்கன. அதுமட்டுமன்றி ஆதரவற்ற சிறுவர்களுக்கு கைகொ டுக்கும் வகையில் நீர்வேலியில் இயங்கும் கருணாலயம் (அன்னை சாரதா சேவா ஆச்சிரமம்), ஜெயந்தி நகரில் மகாதேவா ஆச்சிரமம், தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோயில் போன்ற நிறுவனங்களும் அளப்பெரிய சேவையை ஆற்றி வருவது இங்கு மனங்கொள்ளத்தக்கது.

அதுமட்டுமன்றி உள ரீதியில் மனித மனங்களை ஆற்றுப்படுத்தும் பணியில் சாந்தியம் உள-வள ஆலோசனை நிலையம், யாழ் பிரதான வீதியில் நாலாம் குறுக்கு தெருவில் இயங்கும் கைகொடுக்கும் நண்பர்கள் நிறுவனம், யாழ் போதனா வைத்தியசாலையில் இயங்கும் உள நல சிகிச்சை பிரிவு போன்ற அமைப்புக்களின் சேவைகளும் காலமறிந்து செய்யும் உதவிகளாக கொள்ளத்தக்கன.

அந்த வகையில் உள ரீதியில் பாதிப்படைந்தவர்களை உணர்வு ரீதியாக வழிப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு சமயம் சார்ந்த நிறுவனங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள், புத்திஜீவிகள், ஊடகத்துறையினர் போன்ற அனைத்து தரப்பினரதும் உதவி இவ்விடயத்தில் அவசியமானதாகும்.

இது விடயம் சம்பந்தமான செயற்பாடுகள் கிராம மட்டத்திலிருந்து விரிவுபடுத்தப்பட வேண்டும். நான் எனது என்ற நிலைப்பாட்டிலிருந்து விடுபட்டு “நமக்காக நாம்” என்ற

கூட்டுணர்வுடன் ஒவ்வொருவரும் செயற்பட வேண்டும். தெரு நாடகங்கள் சஞ்சிகைகள் வெளியிடுதல், மனித சங்கிலிப் போராட்டங்கள் போன்றவற்றின் மூலம் ஒவ்வொருவருடைய உள்ளத்தையும் இத்திசை நோக்கி திருப்ப வேண்டும். உள ஆரோக்கியமே மனித ஆளுமை மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் என்பதனை ஒவ்வொரு நபருக்கும் ஏற்படுத்த வேண்டும். அன்பின் வழியில் சிவபெருமானை கண்டு "உணர்ந்து யாவரையும் மகிழச் செய்து நாமும் மகிழ்வோம்.

## *நீராவியடியில் திருநடன தரிசனம்*

யாழ்ப்பாணத்தின் வண்ணார்பண்ணை நீராவியடியில் கடைச்சாமி வீதியில் கடையிற்சுவாமிகளின் சமாதிச் சிவாலயத்திற்குத் தென்புறமாக கடையிற்சுவாமிகளால் இது சிதம்பரமடம் என விளிக்கப்பட்ட பிரதேசத்திலே ஸ்ரீ நடேசப்பெருமான் ஆலயம் அமைந்துள்ளது. சுமார் 120 ஆண்டுகளுக்கு முன் பேரம்பலச்செட்டியாரின் பரம்பரையினரால் அமைக்கப்பெற்று நிர்வகிக்கப்படும் இக்கோவிலின் மூலவராக நடராஜப்பெருமான் தென்திசை நோக்கியபடி சிவகாம சுந்தரியுடன் எழுந்தருளியுள்ளார். இவருடன் தாம்ரவிக்ரகங்களாக அமைந்த ஸ்ரீவித்யா கணபதி, ஸ்ரீஸ்வர்ணாகர்ஷண பைரவர் நால்வர் முதலிய பரிவார மூர்த்திகளும் முன்புறம் நந்தி பலிபீடமும், அமைந்துள்ளன.



தினமும் இருகாலப்பூஜைகளும் பிரதோஷவிரத, சிவராத்திரி, சோமவார, திருவெம்பாவை காலங்களில் விசேஷ பூஜைகளும் நிகழும். வாக்கிய பஞ்சாங்கத்தைப் பின்பற்றி நடராஜப்பெருமானுக்குரிய ஆறு நடேசரபிஷேகங்களும் வெகு சிறப்பாக நடைபெறுவதுடன் ஆவணி நடேசரபிஷேகம் மகாகும்பாபிஷேக தினமாக அமைந்துள்ளது.

இவ்வாலயத்தின் அமைப்புமுறை தத்துவார்த்தச் சிறப்புக்கள் பலவற்றைக் கொண்டது. கனக சபையாக அமைந்த கர்ப்பக்ரக ஸ்தூபியில் ஆகாசலிங்கமாக உள்ள விமானத்தைச் சூழ நான்கு திசையிலும் ப்ருதி அப்பு தேஜோ வாயு லிங்கங்கள் அமைந்துள்ளன. ஸ்தூபின் உட்புறத்தில் குறுகிச் செல்லும் 27 படிக்கட்டுகளும் 27 நட்சத்திரங்களைக் குறிப்பன. கர்ப்பக்கிரக கதவில் அமைந்திருக்கும் 28 மணிகளும் 28 ஆகமங்களைக் குறிப்பன. வாயிலில் அமைந்திருக்கும் 5 படிகள் பஞ்சாட்சரப்படிகள் என அழைக்கப்படுகின்றன. சித்ரசபையாக அமைந்த அர்த்த மண்டபத்தின் நான்கு தூண்களும் நால் வேதங்களைக் குறிப்பன. தாமிர சபையாக விளங்கும் மகாமண்டபத்தின் ஆறு பெரும் தூண்களும் கலாத்வா முதலிய ஆறு அத்வாக்களைக் குறிப்பன.

இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த இவ்வாலயத்தின் பூஜைகளும் அனைத்துக் கிரியைகளும் நல்லூர் நியாய சிரோமணி பிரம்மஸ்ரீ. கி. சுப்பிரமணிய சாஸ்திரிகளின் நெறிப்படுத்தலில் அவரது பரம்பரையினரால் இன்றுவரை செவ்வனே பின்பற்றப்பட்டுவருகின்றன.

**பிரம்மஸ்ரீ.சு. நவநீதக்கிருஷ்ணன்**
**சிரேஷ்ட உதவி நூலகர்,**
**யாழ் பல்கலைக்கழகம்.**

யாழ். இந்து சமய பேரவையில் திருக்களிற்று பஞ்சாக்கர படிகளுடன் கூடிய நடராஜர் சந்நதி அமைந்துள்ளது. இம்மூர்த்திக்கு ஆண்டுக்கு ஒரு அபிஷேக நாளில் சிதம்பர தீட்சிதர்கள் வந்து அபிஷேக வழிபாடுகளை செய்வது சிறப்பம்சமாகும்.



# கேள்வி - பதில்



**கேள்வி : மாணிக்கவாசகருக்கு திருவாதவூரர் என்று பெயர் உண்டு. இந்த திருவாதவூரரின் சிறப்பு என்ன? இது எங்குள்ளது? திருவாதவூர் புராணம் எப்போது தோன்றியது?**

*- ப.சூரியராஜ்*
*உடுப்பிட்டி.*

**பதில் :** திருவாதவூரில் பிறந்தமையால் மாணிக்கவாசக சுவாமிகளுக்கு திருவாதவூரர் என்று திருநாமம் உள்ளது. அதனாலே அவரது வரலாறு பேசும் புராணமும் திருவாதவூரடிகள் புராணம் என்று குறிப்பிடப்படுகிறது. இதை விட திருவாதவூர் புராணம் என்று ஒன்று இருப்பதாக அறியமுடியவில்லை.

இந்த திருவாதவூர் தமிழ் நாட்டில் மதுரையிலிருந்து 24 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. இங்கு 'தானே வேதமாக உள்ளேன்' என சிவனார் திருமாலுக்கு உணர்த்தியதாக கூறப்படுகிறது.

சனிதோஷ நிவர்த்தி ஸ்தலமாக சனி பகவான் சிவபெருமானை பூஜித்த தலமாக கொள்ளப்படும் இத்தலத்தில் உள்ள நூற்றுக்கால் மண்டபம் மாணிக்க வாசகரால் அமைக்கப்பட்டது. இங்குள்ள சுவாமி - வேதபுரீஸ்வரர், அம்பாள் - வேதநாயகி, தலமரம் - மகிழமரம், ஏழு தீர்த்தங்கள் உண்டு.

திருவாதவூரில் அவதரித்த பெருமகனாரின் திருவரலாறு பேசும் திருவாதவூரடிகள் புராணம் எழுதியவர் கடவுள் மாமுனிவர். இவர் 15ஆம் நூற்றாண்டை சேர்ந்தவர். இதில் மொத்தம் 545 பாடல்கள் உண்டு. எட்டுப் படலங்களுடன் பக்திச்சுவை பெருக்கும் காப்பியமாக இது உள்ளது.

**கேள்வி : நான்காம் வருணத்தவர்களான எங்களுக்கு துடக்கு எத்தனை நாள்? ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி சொல்கிறார்களே?**

*- என் நடராஜன்*
*திருநெல்வேலி.*

**பதில் :** துடக்கு என்பது ஆசௌசம் எனப்படும். அந்த வகையில் சைவாசௌச விதியில் நான்காம் வருணத்தாருக்கு ஒரு மாதத்தில் சுத்தி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிலும், சிவபெருமானுக்கு அடிமை செய்து ஒழுகி தூய சிவவாழ்வு வாழ்ந்தால் இருபது நாட்களில் சுத்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்னும் 'லிங்கார்ச்ச சிவபக்தனாம் ஆசௌசம் *பக்ஷம் ஆசரேத்' என்று உள்ளதால் இரண்டாம் தீட்சையான* விசேஷ தீக்ஷை பெற்று சிவபூஜை செய்தால் ஒரு பட்சமாகிய 15 நாட்களில் துடக்கு கழியும் சுத்தி ஏற்படும்.

இதைவிட இன்னும் ஒரு சில விதி விலக்குகளும் உண்டு. உதாரணமாக ஒருவன் துறவியாகி விட்டால் அவனுக்கு துடக்கு இல்லை என்றொரு குறிப்பு உண்டு. நிருவாண தீட்சை வரை பெற்றுள்ளவர்களுக்கும் ஆசௌசம் இன்னும் குறைய வாய்ப்புண்டு.

இதேபோல பிராம்மணர்களுக்கு பத்து நாட்களில் ஆசௌச சுத்தி குறிப்பிடப்பட்டுள்ளது. இவை சிவாகமங்களில் குறிப்பிடப்பட்ட விடயங்களே ஆகும்.

**கேள்வி : இந்துக்களின் கோயில் வாசலில் இருபுறமும் இரு உருவங்களை ஓவியமாக தீட்டி அல்லது செதுக்கி வைத்திருக்கிறார்களே அது ஏன்? சில சமயங்களில் பயம் கொள்ளுமாறு இருக்கிறதே? இதற்கு சரியான பதில் தரமுடியுமா?**

*- கபிரியேல் ஜீவநேசன்*
*மன்னார்.*

**பதில் :** மிகவும் நன்று. இந்த வடிவங்கள் வாயிற் காவலர்களாவர். துவாரபாலகர் என்பர். இறைவனது திருக்கோயிலுள் நுழைவோரை மனத்தூய்மை செய்து இறைவன் உறையும் இடம் என்பதை உணர்த்தும் முகமாக இவர்களை அமைப்பது வழக்கம்.

இந்த பாரம்பரியம் இந்து - பௌத்த கட்டடக்கலைகளில் காணலாம். உக்கிரமாக மட்டுமன்றி அமைதியான தோற்றத்தில் கூட இவர்களை அமைப்பர். காவல் செய்து கோயிலைக் காக்கும் இவர்கள் குறித்த கோயில் கடவுளரின் திருவடிவுக்கு இணங்க சிறுசிறு பெயர், உருவ மாற்றங்கள் பெறுவர்.

உதாரணமாக இவர்களை சிவாலயங்களில் சண்ட - பிரசண்டர் என்றும், விஷ்ணு கோயில்களில் ஜெயன் - விஜயன் என்றும், சக்தி கோயில்களில் ஹரபத்ரா - சுபத்ரா என்றும் அழைப்பர். இறைசிந்தனை ஒன்றையே மனங்கொள்க என்று அறிவுறுத்தும் இவர்கள் கோயிற் பாதுகாவலர்களாக கருதப்படுகிறார்கள். தங்களுக்கு புரிதலுக்கு வேண்டுமாயின் யூத - கிறிஸ்தவ இஸ்லாமிய மரபியலில் உள்ள அதிதூதர்களான மிக்கேல் போன்றோர் என கருதி புரிந்து கொள்ளலாம்.

**– பதில்கள் –**
**ஆசிரியர்**

உ



திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்


**இந்துசாதனம்**
**(HINDU ORGAN)**
email : saivaparipalanasabai1888@gmail.com

ஹேவிளம்பி ௵ மார்கழி மாதம் ௴ 1ஆம் உ [16.12. 2017]


# சைவ சித்தாந்த மரபை வளர்த்தெடுக்க முன்வருவோம்

இப்போதெல்லாம் சைவசித்தாந்தம் குறித்து பேச்சு மீளவும் துளிர் விட்டிருக்கிறது. சமூக வலைத்தளங்களில் சித்தாந்தம் குறித்து ஆய்வுகளும் அலசல்களும் விவாதங்களும் அவ்வப்போது நடைபெறுவதை காணமுடிகிறது.

இந்து சமய தத்துவப்பிரிவுகளான சங்கர வேதாந்திகள் (அத்வைதர்கள்), இராமானுஜ வேதாந்திகள் (ஸ்ரீவைஷ் ணவர்கள்), மத்வவேதாந்திகள் (துவைதர்கள்) போன்றோர் மட்டுமன்றி கிறிஸ்தவர்கள் போன்ற பிற சமயிகள் கூட இவ்வாறான விவாதங்களில் ஆர்வத்தோடு ஈடுபடுவதை காணமுடிகிறது. இது தவிர சைவசமயப் பிரிவுகளாக கொள்ளத்தக்க வீரசைவம், காஷ்மீரசைவம், சுத்தாத்வைத சைவமான சைவசித்தாந்தம், சிவாத்வைத சைவம் போன்றவற்றிடையே உள்ள ஒற்றுமை - வேற்றுமைகள் குறித்துப் பெரும் அலசல்கள் நிகழ்கின்றன.

இணைய வாயிலாகவும் நடைபெறுகின்ற இந்த ஆய்வுகள் மூலம் சைவசித்தாந்தம் குறித்த இளைஞர்களின் ஆர்வம் தூண்டப்பட்டிருப்பதாக கருதலாம். ஆனால் ஈழத்தமிழர்களிடையே இவ்விவாதங்கள் பெருமளவில் இப்போது நடப்பதாக தெரியவில்லை. இது ஒருபுறமிருக்க, இப்போது சைவசித்தாந்த செந்நெறியை கற்க விரும்பாத, அது குறித்து அறிவு பூர்வமாக ஆராய விழையாத சிலரும் தம்மை சைவசித்தாந்திகளாக அடையாளப்படுத்திக்கொண்டு விபரீதமான சில செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

கால மாற்றத்தை உள்வாங்கி இன்றைய சூழ்நிலையை உணராது செய்யப்படும் எப்பணிகளும் வெற்றி தராது. ஆதலில் பழைய கால புறச்சமய, புறப்புறச்சமய பாகுபாடுகளை கைவிட்டு சித்தாந்தத்தை உணர விழையும் அல்லது அறிய விரும்பும் யாவரையும் இணைத்துக் கொண்டு பயணிக்க வேண்டிய தேவையும் கடப்பாடும் நமக்கு உண்டு.

கடந்த சித்திரைத் திங்களில் ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாய எழுச்சிக்கு வித்திட்ட மஹான் இராமானுஜரின் ஆயிரமாவது ஆண்டு விழா உலகளாவிய ரீதியில் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது.இந்த விழா மூலம் வைஷ்ணவ சமயம் மற்றம் விசிஷ்டாத்வைத கொள்கை குறித்து பரவலாகவே ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.

நாமும் சைவசித்தாந்த ஆசிரியர்களில் முதன்மையான மெய்கண்டதேவர் அல்லது உமாபதி சிவாச்சாரியர் பேரில் இத்தகு எழுச்சியை உண்டாக்கலாம். இன்றைக்கு ஸ்ரீ வைஷ்ணவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள திருமலை - திருப்பதி தேவஸ்தானம் சைவத்திருமுறைகள் பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்ப்பாக பெரும் நிதி தந்து உதவுகிறது. திருப்பதி சிவாகமப் பாடசாலை நடக்க வழி கோலுகிறது. புதுச்சேரியிலுள்ள பிரெஞ்சு ஆய்வு நிறுவனமே சிவாகமங்களை பதிப்பிப்பதில் முன் நிற்கிறது.

அத்வைத நெறிபேணும் சங்கரமட அன்பர்கள் சிவாகம பாடசாலை நடாத்துகிறார்கள். சிவாகமங்களின் பதிப்பிற்கு ஆவன செய்கிறார்கள். ஆகவே, எல்லோரதும் அனுசரணையை பெற்று சைவசித்தாந்தத்தை பெரும் எழுச்சியோடு வளர்க்க முன்வரவேண்டும்.

சித்தாந்தத்தை பரீட்சைக்காக கற்காமல் நம் முன்னோர் போல அறிவுக்காகவும், ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் கற்க முன்வரவேண்டும். இவற்றுக்கப்பால் சைவ சித்தாந்தம்

தமிழர்களின் தனியுரிமை என்றொரு பிரசாரமும் இப்போது முனைப்புப் பெற்று வருகிறது. ஆனால் உண்மை யாதெனில் சிவாகம நூல்களே சைவசித்தாந்த அடிப்படையாகும். இந்த வழியில் வந்த ஆகம சுலோக அடிப்படையிலேயே சிவஞானபோதமும் பன்னிரு சூத்திரங்களோடு எழுச்சி பெற்றிருக்கிறது.

ஆக, இந்த ஞானமரபை, ஒரு குறுகிய வட்டத்துள் புதைய விடாது உலகளாவிய பெரும் சொத்தாக மலரச் செய்யவேண்டும். இந்த நோக்கு ஈழத்து ஆன்றோர்களுக்கு பல்லாண்டுகட்கு முன்னரே இருந்துள்ளது. அதனாலேயே காசிவாசி செந்திநாதையர் அவர்கள் 'ஸ்ரீகண்டபாஷ்யத்தை' (சித்தாந்தச் சார்பான பிரம்மசூத்திர உரை) அச்சிட்டு வெளியிட்டார்.

சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் கண்ணன் அருளிய பகவத்கீதைக்கு சைவசித்தாந்த உரை வகுத்தார். சபாபதி நாவலர் அவர்கள் சிவஞானபோத நூலை நுணுகி ஆராய்ந்து வடமொழியில் சிவாகமத்திலுள்ள சிவஞானபோதமே தமிழ்மொழியிலுருவான மெய்கண்டதேவரின் சிவஞானபோதத்திற்கு அடிப்படை என தமது 'திராவிடப் பிரகாசிகை' என்ற நூலில் எழுதினார்.

இந்நூல்களை இன்று நாம் காண்பதே கடினமாகிப் போயுள்ளது. போர்த்துக்கேயர் காலத்திலேயே பசுவதைக்கு அஞ்சி பரதேசம் போன திருநெல்வேலி ஞானப்பிரகாசரை நாம் இன்று ஞாபகத்தில் வைத்துள்ளோமா? அவரது நூல்கள், பிற்கால சைவசித்தாந்த அறிஞர்களது நூல்கள் இன்று காணக்கிடைக்கிறதா?

இப்போது மகிழ்ச்சி தரும் நிகழ்வு யாதெனில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் தொடர்ச்சியாக சைவமாநாடு ஆண்டுதோறும் நடாத்தப்படுவதாகும். இப் பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்த துறை அல்லது பீடம் ஒன்று உருவாவதும் காலத்தின் தேவையாகும்.

இவைகளெல்லாம் இவ்வாறிருக்க இப்போது இலங்கை யிலுள்ள கல்வித்திட்டத்திலுள்ள க.பொ.த.சாதாரண தரம் வரையுள்ள 'சைவநெறி' என்ற பெயரிலான சமய பாடத்தை இந்துநெறி என மாற்றும் ஏற்பாடுகள் நடந்து வருகிறது.

பொதுநிலையில் இந்துக்கள் என நாம் அழைக்கப்படினும் சிறப்பாக விபூதி, உருத்திராக்கம் அணிந்து சிவவழிபாடு செய்யும் சைவசமயிகளாவர். எனவே, இந்த மாற்றம் தற்போது எவ்விதத்திலும் அவசியமன்று. இதைவிட செய்யப்படவேண்டிய பற்பல பணிகள் நம்முன் விரிந்து கிடக்கின்றன.

இந்துக்களான சனாதன தர்மத்துள் உட்பட்டு வாழும் யாவருக்கும் உரிய பிராமண நூல்களான உபநிடதங்கள், பிரம்மசூத்திரம், பகவத் கீதை போன்றவற்றையும் சைவசமயிகளின் சிறப்பு நூலான சிவாகமங்களையும் சைவசித்தாந்த உரை செய்து பேண வேண்டும்.

சித்தாந்த சாஸ்திரங்களை ஆங்கிலத்தில் உரியவகையில் மொழிபெயர்க்க வேண்டும். சிறு சிறு கதைகள் வாயிலாக சித்தாந்த உண்மைகளை தேனில் கலந்து கொடுக்க வேண்டும். ஆக, நாமும் நம் முன்னோர் இட்ட வழியில் இயன்றளவேனும் சைவசித்தாந்தத்தை கற்போம். வாழ்வியல் நெறியாக கொண்டு உயர்வு பெறுவோம்.

**நட்புடன், ஆசிரியர்**



***மிகப்பெரும் சைவாதீனமான திருவாவடுதுறை ஆதீனம் சைவசித்தாந்த முதன்மை ஆசிரியர்களோடு நேரடித் தொடர்புடையது. தவிர இந்த ஆதீனத்தை சேர்ந்த மாதவ சிவஞானமுனிவர் சிவஞானபோத மாபாடியம் செய்தவர். இந்த மரபில் வந்த ஆதீனத்தார் இன்றும் சைவசித்தாந்தத்தை பேணி வளர்க்கப் பெரும் பணி ஆற்றுகின்றனர்.***

**படத்தில்** ⇨

***01.12.2017 கார்த்திகை அசுபதி நாளில் திருவாவடுதுறை ஆதீன குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் அவர்கள் திருமுகம் வாசிக்க கேட்டருளி முகூர்த்த ஓலையில் தங்க எழுத்தாணியால் பாரம்பரிய முறைப்படி கையெழுத்து இடும் திருக்காட்சி.***

# சைவ சித்தாந்தத்திற்கு பெரும்பணியாற்றும் திருவாவடுதுறை ஆதீனம்

**நீர்வை தி.மயூரகிரி**

எப்போதுமே நம்மவர்களுக்குத் திருவாவடுதுறையாதீனம் பேரில் அளவற்ற பற்று; பக்தி; ஈடிணையற்ற ஈடுபாடு; இதற்குப் பற்பல காரணங்கள். ஆறுமுகநாவலர், சபாபதி நாவலர், தாமோதரம்பிள்ளை என்று பற்பல இலங்கைச் சைவப்பிள்ளைகளுக்கு சீரும் பேரும் தந்து சிறப்புச் செய்த பெருமை அதற்கு உண்டு. ஆறுமுகம்பிள்ளைக்கு 'நாவலர்' பட்டம் அளித்தவர் 16ஆவது குருமகாசந்நிதானமான மேலகரம் சுப்பிரமணிய தேசிகராவார்.

தமிழகத்தின் நாகபட்டினம் மாவட்டத்தில் உள்ள இந்த ஆதீனம் திருவாவடுதுறை என்ற சிறுகிராமத்தில் உள்ளது. திருக்கைலாய பரம்பரை அகச்சந்தான குரவர் வழிவந்த புறச் சந்தான குரவரான மெய்கண்ட தேவரின் நேரடி சீட பரம்பரையில் இந்த ஆதீனம் தோன்றி வளர்ந்துள்ளது. மெய்கண்டதேவர் - அருணந்தி சிவாசாரியார் - மறைஞானசம்பந்தர் - உமாபதி சிவாசாரியார் என்ற புறச்சந்தான குரவரில் உமாபதி சிவாச்சார்யரின் சீடரான அருள் நமசிவாய தேசிக பரமாச்சார்யரே திருவாவடுதுறை ஆதீனத்தின் முதற்குரவராக போற்றப்படுகிறார்.

சிதம்பரம் நடராஜமூர்த்தியே இவ்வாதீன ஆத்மார்த்த மூர்த்தியாக 'ஞானமாநடராஜ மூர்த்தியாக' ஆதீன குரவர்களின் பூசனையை ஏற்றருள்கிறார். தவிரவும், மாணிக்க வாசகப் பெருமானுக்கு உரியதாகப் போற்றப்படுவதும் அப்பெருமானால் அமைக்கப்பெற்றதும் திருவாசகம் பிறந்த தலமாக குறிப்பிடப்பெறுவதுமான திருப்பெருந்துறை ஆத்மநாத சுவாமி கோயில் (ஆவுடையார் கோயில்) இந்த துறைசையாதீனத்துக்கே சொந்தமாக விளங்குகிறது.

இத்தகு தொடர்புகளால் மார்கழி மாதத்தில் இந்த பேராதீனம் பற்றிச் சிந்திப்பது பொருத்தமானதாகும். 700 ஆண்டு காலம் பழமை மிக்க இந்த ஆதீனத்தைச் சேர்ந்தவரும் சிவஞானபோத மாபாடியம் அருளியவருமான மாதவச் சிவஞான யோகிகள்

*"கயிலாய பரம்பரையிற் சிவஞான*
*போதநெறி காட்டும் வெண்ணைய்*
*பயில் வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்*
*மெய்ஞ்ஞான பானுவாகிக்*
*குயிலாரும் பொழிற்றிருவாவடுதுறை வாழ்*
*குரு நமச்சிவாய தேவன்*
*சயிலாதி மரபுடையோன் திருமரபு*
*நீடூழி தழைக்க மாதோ"*

என்று குருமரபு வாழ்த்து இசைத்துப் போற்றுகிறார். டாக்டர் உ.வே.சாமிநாதஜயர், திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, ஆறுமுக நாவலர், நாதஸ்வர வித்துவான் டி. என். ராஜரத்தினம்பிள்ளை போன்றோரால் ஆதீனத்துக்கும் ஆதீனத்தால் இவர்களுக்கும் கிடைத்த ஆதரவையும் உயர்வையும் உலகறியும்.

இந்த ஆதீன 23ஆவது குருமஹா சந்நிதானமாக விளங்கிய சிவப்பிரகாசதேசிக பரமாச்சார்ய சுவாமிகள் பன்முறை இலங்கைக்கு விஜயம் செய்தவர். நமது யாழ். சைவபரிபாலன சபையின் நூற்றாண்டு காலப்பணியை பாராட்டி 'சித்தாந்த சைவச்சுடர் நிலையம்' என்ற விருது வழங்கி (2008) கௌரவித்தவர். அது போலவே சைவசித்தாந்த பயிற்சி மையங்களை பலப்பல இடங்களிலும் கொழும்பிலும் அமைத்து சித்தாந்த அறிவைப் பரப்பியவர்.

இந்த சுவாமிகளை திருவாவடுதுறைக்கே சென்று ஆசியும் அன்பும் பெற்று அளவளாவிய நினைவுகள் இன்றும் எனக்கு உண்டு (2011). சரஸ்வதி மகால் என்ற பேரில் மிகப்பெரும் நூலகப் பொக்கிஷத்தையும் கொண்ட இந்த ஆதீனத்தின் 23ஆவது குரு மஹாசந்நிதானம் 2012ஆம் ஆண்டு பரிபூரண நிலை எய்தியபின் இப்போது 24ஆவது குரு மஹா சந்நிதானமாக ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் அருளாட்சி செய்து வருகிறார். 50 இடங்களில் கிளை மடங்களை உடையதும் 20 பெரிய திருக்கோயில்களை பரிபாலனம் செய்வதுமான சீர்மிக்க திருவாவடுதுறையாதீனத்திற்கு பற்பல சிறப்புகளுண்டு.

திருவிடை மருதூர் மஹாலிங்க ஸ்வாமி கோயில், திருநள்ளாறு தர்ப்பாரண்யேஸ்வர ஸ்வாமி கோயில், திருப்பெருந்துறை ஆத்மநாத ஸ்வாமி கோயில் போன்றனவும் இந்த ஆதீன ஆளுகையிலேயே இயங்குகின்றன. சமயப் பணிகளுக்கு அப்பால் பல்வேறு சமூகப்பணிகளையும் மேற்கொள்ளும் திருவாவடுதுறை ஆதீனம் தமிழார்வம் மிக்கதாக பற்பல பணிகளை ஆற்றுவதோடு மிக இறுக்கமாக வேத சிவாகம சைவசித்தாந்த மரபையும் பேணி வைதிக சைவத்தை வளர்த்து வருகிறது.

மெய்கண்ட சந்தானமான இந்த ஆதீனத்தால் 'மெய்கண்டார்' என்ற பேரில் ஒரு மாத இதழ் வெளியிடப்படுகிறது. உமாபதி சிவாச்சார்யர் பூஜித்த ஆனந்த நடராஜரை ஆத்மார்த்த மூர்த்தியாக போற்றும் ஆதீன மரபை போற்றுவோம்.

தில்லைக் கூத்தன் திருவருளால் தாய்த்தமிழக ஆதீனமான துறைசையாதீனத்தோடு இலங்கைச் சைவ மக்களுக்குமான உறவு நெருக்கம் அடையட்டும்.

# நாவலர் சரிதமோதும் நற்றமிழ் மாலை

கவிஞர் திரு. இராசையா குகதாசன்

(2017 கார்த்திகை மாதம் இந்துசாதனம் 11ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருவுடை மார்கத் தாரும் தேசொடு படித்த பேரும்
வருகுவ ரென்போ லுங்கள் வைவினைக் கேட்டுக் கேட்டு
கருதவை தரக்கைம் மாறு கருதாது போதித் தூக்க
ஒருவரும் வாரா ரென்றார் உலகினி லென்னைப் போல. 655

**இருபத்தைந்தாண்டின்பின் நாவலரும் நல்லூரும்**

கருமத்தை யோதக் கேட்டுந் தாமவை மறுத்த தாலே
இருபத்தி யைந்து ஆண்டா யிக்கோயில் வந்தி டாரை
கருமத்தர் கந்தை யாமாப் பாணவம் முதலி யென்பார்
ஒருதத்தை தெய்வ யானை திருமணப் படலத் திற்கே. 656

நாவலர் நீரே வந்து நற்பொரு ளுரைக்க வேண்டும்
ஆவல ராகி வந்தேன் அதற்குநீ ரிசையு மென்ன
சேவலங் கொடியன் கோவில்ச்சி வாகம முறையில் வைத்தும்
கேவல பலியை நீவிர் கேடென நிறுத்தி வைத்தும். 657

கோவிலை நடத்த நீவிர் குறித்துரை செய்வீ ராயில்
பாவினின் பொருளு ரைக்கப் படியதை மிதிப்ப னென்ன
மேவிடு மாயி ரத்தெண் நூற்றெழு பத்தி ரண்டு
காவல ரிசைய வானி கருத்துரை செயவி ழைந்தார். 658

கந்தபு ராண படனக் கருத்துரை முடிந்த பின்னே
இந்தநற் கோவில் மேவி யிருந்திடு குற்ற மெல்லாம்
அந்தசற் சபையி லுள்ளோர் அறிந்திடு மாறு பேசக்
குந்தகம் மாற்றி வைக்கக் கோவில்நிர் வாகி யெண்ணி 659

ஆங்கிர சவாண் டாயிரத் தெண்ணூற் றெழுபத்தி மூன்று
பாங்குறு தையி னேழு பார்பெருஞ் சபையைக் கூட்ட
ஓங்கிடு மகிழ்ச்சி யோடு ஒருப்பட்டு அங்கு வந்தே
ஆங்கவர் சுப்(ப)ர மணியர் அங்கலட் சணங்கள் சொல்லி. 660

ஆயுதம் வைத்து வேற்ற லாகமவி ரோத மென்றும்
ஏயவன் கிரியை யாவு மிவன்விதி யில்லை யென்றும்
தூயவன் கருப்பக் கிரகம் கருங்கல்லா லாக்கு மென்றும்
சேயவன் சிலாவிக் கிரகம் தாபிக்க வேண்டு மாயும். 661

மெய்ப்பொரு ளெடுத்து வாற்றி மேதகர் பிரசங் கிக்க
ஒப்பருஞ் சபையி லுள்ளா ருண்மைகள் விளங்கி னோராய்
அப்பெரும் பணிக்கு ஆறா யிரம்வரை சேர்த்த ளித்தே
செப்பருங் கருங்கல் லாலே திருப்பணி செய்யு மென்றார். 662

அங்கிருந் தவருட் சிலபேர் ஐயனில் லாச்ச பைக்கே
பொங்கிடு நிதியை வாரித் தந்திடோ மென்று சாற்ற
தங்கிடு பணியிச் சபையைச் சார்ந்திடா தென்றே யெண்ணி
அங்கவர் மனமி லாதும் அமர்ந்திட ஒருப்பட் டார்கள். 663

கற்றிருப் பணிக்கு வென்றே கருவூரி லிருந்து நல்ல
பொற்புறு அளவி னோடு பெருகருங் கற்க ளெல்லாம்
முற்றிடக் காசு மூவா யிரத்திற்குக் கொணர்ந்து போட்டு
உற்றவிப் பணிக ளோங்கு மென்றகம் மலர்ந்த தோடு. 664

ஏற்றநல் லிடத்தைத் தேர்ந்து எழிலுறு மடமி யற்றி
போற்றியெம் மிறையின் பாதம் புகன்றிடு தேவா ரங்கள்
சாற்றரும் பிரசங் கங்கள் சால்புறு மன்ன தானம்
ஊற்றென வழங்கு மெண்ண முளமதிற் கொண்டி ருந்தார். 665

**மிருகபலியைத் தடுத்தமை**

சீலமா மகிழ்ச்சி பொங்க ஸ்ரீமுக வருஷத் தேரின்
கோலம்நீர் காண நல்லூர்க் கோவிற்கு வாரு மென்ன
ஞாலத்தே ரோட்டத் திற்கும் ஞானவை ரவசாந் திக்கும்
சாலவாம் கிராமத் திற்காய்ச் செய்திடு சாந்தி யிற்கும். 666

ஆட்டினைப் பலிகொ டுத்தே ஆற்றிடு பூசை யால்வர
மாட்டனென் றுரைக்க வெல்லாம் மாற்றிட விசைந்த மென்றே
வாட்டம தேகு மாறு வலுஉப சாரஞ் செய்தே
கேட்டுள வாறு செய்வோம் கேடில்லை வாரு மென்றார். 667

தலத்தவ ருரையைக் கேட்டத் தவகமர் சென்ற காலை
நலத்தகு கிராம சாந்தி ஞானவை ரவரின் பூசை
புலத்துள தேரி னோட்டம் புரிபலி யாவும் விட்டே
நிலத்தவர் முனிவு நீங்க நெடுவிதி நடத்தி னார்கள். 668

கண்டவர் கண்ணும் நெஞ்சும் களிப்புறப் புளக மாகி
திண்டிறல் தேரின் பின்னே தேவார பஜனை யெல்லாம்
பண்டுள வடிவ மான பண்முறை மருவப் பாடி
தண்டமிழ் மொழியில் வல்லார் தன்பணி தொடர்ந்து வந்தார்.669

நீங்கரு மன்ப ரான சுப்பையர் கார்த்தி கேயர்
பாங்குள வாறு ஆறு வாயிரத் தெண்ணூற் றெழுபத்தி
தீங்ககல் நாலிற் கோவில் தெற்கிலம் மையன் வளவை
தாங்கருந் தவத்தின் மிக்கார் தம்முளம் மகிழு மாறே. 670

பற்றொடு பரப்பு ஐந்தும் பன்னிரு குளியு மாக
உற்றிடு காணி யொன்றை உகந்தநல் மடம மைத்தே
சிற்பரன் பூசைபு ராணம் திருமுறை யோதல் போன்ற
நற்றிருப் பணிக ளாற்ற நாவல ரிடம்கொ டுத்தார். 671

வண்ணையில் வாழு மன்பரி ராகவப் பிள்ளை யோடு
புண்ணிய ராகு செல்வ நாயகம் பிள்ளை யாரும்
பண்ணிய உதவி யாலே படைமடா லயம்வை காசி
நண்ணிடு மூல நாளை நல்ஓரை யெனவுட் தேர்ந்தே. 672

தொடரும்....

# பெரிய புராணம் (தொடர்)

**(சிறுவர்களுக்கான சுருக்கம்)**

**இரா. செல்வவடிவேல்**

**ஆசிரியர்**

## சுந்தரர் வரலாறு

எல்லாம் வல்ல பரம்பொருளாகிய சிவபெருமான் விரும்பி வசிக்கும் திருக்கைலாய மலையில் அவருக்குத் திருத்தொண்டு புரியும் "ஆலால சுந்தரர்" என்னும் அடியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். ஒருநாள் அவர் ஈசனுக்கு வழிபாடாற்றி மலர் கொண்டு வருவதற்கு நந்தவனத்தை அடைந்தார். அங்கு அம்பிகையின் தோழியர்களாகிய அநிந்திதை, கமலினி என்பவர்கள் மலர் பறிக்க வந்திருந்தார்கள். அப்பெண்மணிகள் இருவரையும் கண்டு ஆலாலசுந்தரர் ஆசைப்பட்டார். அவர்களும் அவர் மீது விருப்பம் கொண்டனர். எல்லாம் உணர்ந்த இறைவன், "நீ பெண்கள் மீது ஆசை கொண்டாய். ஆகையால் நீ பூவுலகில் பிறந்து அவர்கள் இன்பத்தைப் பெறக் கடவாய்" என்றார். அதனைக் கேட்ட ஆலாலசுந்தரர் மனம் நடுங்கி, உடல் ஒடுங்கி, இறைவனை வணங்கி, "ஐயனே! அடியேன் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும். அடியேன் பூவுலகில் பிறக்க வேண்டும் என்பது தங்கள் சித்தமாயின் நான் உலக மாயையில் சிக்கி அலையும்போது என்னைத் தடுத்தாட்கொள்ளுதல் வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். சிவபெருமானும் அவ்வாறே அருள்புரிந்தார்.

இதனால், ஆலாலசுந்தரர் தமிழ்நாட்டில் திருநாவலூர் என்னும் புண்ணியப் பதியில் ஆதிசைவர் குடும்பத்தைச் சார்ந்த சடையனார் என்னும் சிவாச்சாரியாருக்கும், அவர்தம் மனைவியாராகிய இசைஞானியாருக்கும் ஓர் அருமை மைந்தராகத் தோன்றினார். பெற்றோர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. தம் மகனுக்குப் பெற்றோர் நம்பியாரூரர் என்னும் பெயரிட்டு அழைத்தனர். நம்பியாரூரர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கல்வித்துறைகள் எல்லாவற்றிலும் வல்லவராய் விளங்கினார். நாளடைவில் அவர் திருமணப் பருவத்தை அடைந்தார்.

சடையனார் புத்தூர் எனும் ஊரில் வாழும் சங்கவி சிவாசாரியார் என்னும் அந்தணரின் மகளை மணம்பேசி வரப் பெரியோர்கள் சிலரை அனுப்பி வைத்தார். திருமண நாள் குறிக்கப்பட்டது. திருமண நாளன்று நம்பியாரூரரை மணக்கோலம் செய்வித்து திருமணப் பந்தலில் நிறுத்தினர். உற்றாரும் உறவினரும் சான்றோரும் அங்கு கூடியிருந்தனர்.

சுந்தரரைத் தடுத்தாட்கொள்வதாகத் தாம் முன்பு கூறியதை எண்ணிய சிவபிரான் அவ்வாறே செய்வதற்காக ஒரு முதிய அந்தணர் வேடம் தாங்கி திருமணம் நடைபெறும் வீட்டை அடைந்தார்.

வேதியர் திருமணப் பந்தலில் சென்று நம்பியாரூரை நோக்கி, "உனக்கும் எனக்கும் ஒரு வழக்கு உள்ளது.அதனைத் தீர்த்த பின்னரே நீ திருமணம் செய்து கொள்ளலாம்" என்று முறையிட்டார். அதனைத் தீர்த்த பின்னரே நீ திருமணம் செய்து கொள்ளலாம்" என்று முறையிட்டார். அது கேட்ட நம்பியாரூரர் மிக்க வியப்புற்று அது என்னவென்று கேட்டார். அதற்கு வேதியர் சபையில் உள்ளவர்களை நோக்கி, "பெரியோர்களே, இந்த நம்பியாரூரன் எனக்கு அடிமையாவான். இவன் பாட்டனார் எனக்கு அடிமைச் சாசனம் எழுதிக்கொடுத்துள்ளார்" என்று முறியோலையைக் காட்டினார். வேதியர்கள் அதைக்கேட்டு நகைத்தனர். அவர்கள் யாவரும் அந்தணரைப் பார்த்து, "அந்தணருக்கு அந்தணர் அடிமையாதலை இதுவரை அறியோம்! தங்கள் பேச்சு புதுமையாக இருக்கிறது" என்றார்கபள். ஆரூரர் மிகுந்த சினம் கொண்டு "நீர் ஒரு பித்தரோ?" என்று கூறி அவர் கையிலிருந்த ஓலையைப் பிடுங்கிக் கிழித்து எறிந்தார். அந்தணர் ஆரூரரை எளிதாக விடவில்லை. வேதியர்கள் அவரை நோக்கி, "வீண் வழக்கிடும் நீங்கள் யார்? எந்த ஊர்?" என்று கேட்க, அவர் "திருவெண்ணெய் நல்லூர்" என்றார். உடனே அவர்கள், "அங்ஙனமாயின் அவ்வூருக்கே சென்று அங்குள்ள சான்றோர்கள் மூலம் உங்கள் வழக்கைத் தீர்த்துக் கொள்ளுங்கள் என்றனர்.

அந்தணர் ஆரூரரை திருவெண்ணெய் நல்லூருக்கு அழைத்துச் சென்று அங்கு தம் வழக்கைக் கூறி, மூல ஓலை ஒன்றைக் காட்டி அதில் ஆரூரரின் பாட்டனாருடைய கையெழுத்து சரியாக இருப்பதை நிரூபித்தார். அது கண்ட திருவெண்ணெய் நல்லூர் வேதியர்கள், "ஆரூரர் அக்கிழ அந்தணருக்கு அடிமையாவதே முறை" என்றனர். அவரும் உடன்பட்டார். அந்தணர்கள் கிழவேதியரை நோக்கி, "பெரியீர், இந்த ஊரில் தங்கள் வீடு எங்குள்ளது? காட்டவேண்டும்" என்றனர். அவரும் காட்டுவதாக அவர்களை அழைத்துச் சென்று அருட்டுறை என்னும் ஆலயத்தைக் காட்டி உள்நுழைந்து மாயமாய் மறைந்தார். எல்லோரும் திகைத்தனர். சிவபெருமான் இடபாரூடராகத் தோன்றி ஆரூரரை தடுத்தாட்கொள்ளவே அவ்வேடத்தில் வந்ததாகக் கூறினார். பின்பு அவர் ஆரூரரை நோக்கி, "நீ என்பால் வன்சொல் கூறியமையால் வன்றொன்டன் எனப்பெயர் பெறுவாய், அன்றியும் என்னை முன்னர் பித்தன் எனறு அழைத்தாய். ஆதலால் பித்தா என்று தொடங்கிப் பாமாலைகள் பாடுவாயாக" என்று கூறி மறைந்தனர். ஆரூரரும் இறைவன் திருவருளால்

*"பித்தா! பிறைசூடீ! பெருமானே! அருளாளா*
*எத்தான்மற வாதேநினைக் கின்றேன் மனத்(து) உன்னை*
*வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்*
*அருட்டுறையுள்*
*அத்தா! உனக்(கு) ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே?*

என்று தொடங்கிப் பதிகங்கள் பாடினார்.

**சுந்தரர் வாழ்வு தொடரும்....**

# ஈழத்தில் கோவிலை மையப்படுத்திய காத்தவராயன் கூத்து மரபு

**செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன்**
**பிரதி முதல்வர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.**

கூத்து என்பது நிகழ்த்திக்காட்டப்படும் ஒரு கலையாகும். இலங்கையில் வடமோடி, தென்மோடி, சிந்துநடை எனக் கூத்து வடிவங்கள் பல நிலைகளில் பயிலப்பட்டு வருகின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் ஆற்றுகை செய்யப்படும் கூத்துக்களை சமயம்சார் கூத்துக்கள், வரலாறுசார் கூத்துக்கள், சமூகம்சார் கூத்துக்கள் என மூன்று நிலைகளில் நோக்கலாம்.

கத்தோலிக்கச் சமயத்தளத்தில் சமயநிலைக் கூத்துக் களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவது அதிகமாகக் காணப்ப டுகின்றது. இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் கத்தோலிக்க ஆலயங்களில் கூத்துக்களை ஆற்றுகை செய்யவென மேடைகள் நிரந்தரமாக அமைக்கப்பட்டமையும் வரலாறாகும். ஞானசவுந்தரி, சந்தியோகுமையூர் முதலிய பல நாட்டுக் கூத்துக்கள் இன்றும் கத்தோலிக்க தளத்தில் ஆலயங்களில் ஆடப்படுகின்றன.

இந்து சமய தளத்தில் நாட்டுக்கூத்துக்கள் ஆடப்படு வதற்கான சந்தர்ப்பங்கள் ஒப்பீட்டளவில் குறைவு என்றே கூறலாம். சமூகத்தின் ஆணிவேரான அடிநிலை மக்களின் கலையாக இது பார்க்கப்பட்டமையும் இதற்குரிய காரணங்களுள் ஒன்று ஆகும். காத்தவராயன், கோவலன் கூத்து, வசந்தன் கூத்து, பப்பவராயன் கூத்து முதலியவற்றை இங்கு உதாரணமாகச் சுட்டலாம். வரலாறு சார்ந்த தளத்தில் சங்கிலியன், கண்டியரசன் முதலிய கூத்துக்கள் ஆடப்படுகின்றன. சமூகத்தளத்தில் பவளக்கொடி முதலிய கூத்துக்கள் ஆடப்படுகின்றன.

கோவிலை மையப்படுத்தியே பெரும்பாலான கலை கள் இன்றும் வளர்ந்த வண்ணம் உள்ளன. இதற்குக் கூத்துக் கலையும் விதிவிலக்காக முடியாது. கோவிலை மையப்படுத்திய கூத்துக்களை வளர்த்ததில் கிராமங்களின் பங்கு முக்கியமானதாகும். வட்டுக்கோட்டை, அரியாலை, பளை, மாதனை, நீர்வேலி, அல்வாய், சாவகச்சேரி, முல்லைத்தீவு முதலிய இடங்கள் இந்து சமயத்தளத்திலான கூத்துக்கலைக்குப் பிரபலம் பெற்ற இடங்களாக விளங்குகின்றன. இந்து சமயத் தளத்தில் பிரபலம் பெற்ற கூத்தாகக் காத்தவராயன் கூத்தே விளங்குகின்றது. .

தமிழகத்தில் சிறுதெய்வ வழிபாட்டுக்குரிய தெய்வமாகச் சித்திரிக்கப்படும் காத்தவராயன் இலங்கையிலும் வழிபடு தெய்வமாகப் பூசிக்கப்படுகின்றார். காத்தவராயன் கதை மூன்று நிலைகளில் பேணப்படுகின்றது என ஆய்வாளர்கள் சுட்டுகின்றனர். பூசாரி காத்தவராயன் உருவேறி ஆடுதல், காத்தவராயன் கதாகலாட்சேபம், பலர் சேர்ந்து கூத்தாகக் காத்தவராயன் கதையை ஆடுதல் என மூன்று நிலைகளைச் சுட்டுகின்றனர்.

இந்து சமயத் தளத்தில் மழை வேண்டி அல்லது நோய் நீக்கம் வேண்டி நேர்த்திக் கடனாகக் கூத்து ஆடப்படும் மரபு காணப்படுகின்றது. நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவிலில் கூத்து ஆடப்படும் போது அம்மன் வந்திருந்து கூத்துப் பார்ப்பதாகக் கருதி கதிரை ஒன்றை பிரத்தியேகமாக அமைத்துவிடும் மரபும் காணப்படுகின்றது.

காத்தவராயன் கூத்து ஆடப்படும் போது ஆற்றுகை செய்பவர்கள் இடுப்பில் வேப்பிலை கட்டியவாறு ஆடும் மரபும் உள்ளது. கதையில் வரும் மாரியை மழைத்தெய்வமாகக் கருதி வாழ்வின் ஆதாரமாக அமைந்துள்ள மழையை நினைத்து வரம் வேண்டுவதாக முத்துமாரியை நினைத்து கூத்து ஆடப்படும் வழக்கமும் காணப்படுகின்றது. இது முத்துமாரி அம்மன் வழிபாட்டிற்கும் வழிகோலியது.

காத்தவராயன் கதை கொண்டிருக்கின்ற செல்வாக்கின் காரணமாக அது திரைப்படமாகவும் வெளிவந்தது. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இதில் பிரதான பாத்திரம் ஏற்றிருந்தார்.

காத்தவராயன் கூத்தின் போது சமயம் சார்ந்த சடங்கா சாரங்களைப் பேணும் நிலையையும் காண முடிகின்றது. காப்புப் படிக்கும் போது பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகும் கூத்து ஆறு மணி நேரங்களுக்கும் மேலாக ஆடப்பட்டுப் பித்தா பிறை சூடி என்ற தேவாரப்பாடலுடன் நிறைவடையும். காப்புப் பாடலின் பின்னர் கூத்து அவையை விட்டு யாரும் வெளியே செல்லக் கூடாது என்ற நம்பிக்கையும் மக்கள் மனத்தில் உள்ளது.

காத்தவராயன் போன்ற கதைகளில் சிறு தெய்வங்களுக்கே முக்கியத்துவம் அதிகம். சிவன் திருமால் போன்ற பெருந்தெய்வங்களும் கதையில் இடம்பெறுகின்றனர். ஆனால் அவர்கள் அடிநிலைப் பழக்கங்களைக் கொண்டவர்களாகவும் சித்திரிக்கப்படுகின்றனர். எடுத்துக்காட்டாக காத்தவராயன்

சிந்து நடைக் கூத்தில் இடம்பெறும் சிவன் கஞ்சாவைப் பயன்படுத்தி போதைக்கு உள்ளாகின்றார். இதனால் மாரி பின்வருமாறு பாடுகின்றார்.

*"சுத்துகின்றார் அத்தான் சுத்துகின்றார்.*
*அவர் பம்பரம்போல் அத்தார் சுத்துகின்றார்"*

அடிநிலை மக்களின் இலக்கியங்களில் இத்தகைய காட்சிகள் தவிர்க்க இயலாதவை.

காத்தவராயன் சிந்து நடைக் கூத்து மக்களிடையே பெற்ற செல்வாக்கின் காரணமாக நீதி காத்தான் (மனுநீதிச் சோழன்), அறங்காத்தான் (குமணன்) என சிந்து நடைக் கூத்துக்கள் யாழ்ப்பாணத்தில் திருமறைக் கலாமன்றத் தயாரிப்பாக எழுந்தன என்பதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டுதல் பொருத்தம். விடுதலைப் புலிகள் காலத்தில் போராட்ட உணர்வை மக்களிடையே வளர்ப்பதற்காக நவீன காத்தவராயன் என சிந்து நடைக் கூத்து மேடையேற்றப் பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தொலைக்காட்சி, சினிமா முதலிய பொழுது போக்குச் சாதனங்களின் பெருக்கத்தால் கூத்துக்கலை முறைமையும் பல சவால்களைச் சந்தித்து வருகின்றது. இளைய சந்ததியினருக்கு இத்துறை மீதான நாட்டம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. அதிக நேரத்தைக் கூத்திற்காகப் பயன்படுத்துவதும் இதற்குரிய காரணமாக இருக்கலாம்.

ஈழத்தமிழரின் தனித்துவமான ஆடற்கலை வடிவமாகக் கூத்தினைக் கொள்ளும் சூழலில் இன்றைய சமூகத்தவர் விரும்பத்தக்க கலை வடிவமாக அதனை ஆற்றுகை செய்யக் கூடிய நுட்ப முறைகளைக் கையாண்டு பக்திச் செய்திகளைக் கூத்துக்கலையின் ஊடாக வளர்ப்பதற்கு அண்ணாவிமார்களும் கூத்துக்கலை ஆர்வலர்களும் முயல்வது நலம் பயப்பதாக அமையும். சமயச் செய்திகளைக் கருத்தாழமாகச் சொல்வதற்கு நாடக வடிவத்தை வலிமை மிக்க சக்தியாகக் கருதும் சூழலில் நம்மவர்களும் அத்தகைய தளத்தை முயன்று பார்ப்பது சாலச் சிறந்தது.

## *இரு ராசாக்கள் !* (ஆதிரையில் ஆடும் அழகர்கள்)

சைவ சமயத்தில் இரு ராசாக்கள் உளர் என்பர்! காவிரித் தென்கரைத் தலத்தில் விளங்கும் பதியாகிய திருவாரூர் தியாகராசர் ஒரு ராசா ! காவிரியின் வடகரையில் விளங்கும் பதியாகிய சிதம்பரத்தின் நடராசர் ஒரு ராசா !இருவருமே ஆதிரையர்கள்அதாவது, இருவருமே ஆதிரை நாளில் விழா காண்பவர்கள். தில்லையின் நடனம் ஆனந்த தாண்டவம். தியாகரின் நடனம் அஜபா தாண்டவம். இருவரும் செங்கழுநீர் மாலைகளை விரும்பி அணிவதால் செங்கழுநீர்த் தாமத்தார் எனும் சிறப்புப் பெயர் பெற்றவர். தில்லை பொற்கோயில் என்றால் தியாகராசருடையது பூங்கோயில் ! தில்லை பெருமான் ஆகாச வடிவினர் என்றால் திருவாரூர் பெருமான் பூமி வடிவினர் ! இரண்டு இடங்களிலும் ஆயிரம்கால் மண்டபம் உள்ளது.



தியாகராஜர்

தில்லையிலும் திருவாரூரிலும் மூலலிங்கத்திற்கு " மூலட்டானேசுவரர் " என்றே பெயர். இருபெருமானும், அடியவர்களின் பெருமையைப் புகழ்ந்து பாட அடியெடுத்துக் கொடுத்தவர்கள். திருவாரூர் பெருமான் சுந்தரருக்கு " தில்லைவாழ் அந்தணர் " என்று அடியெடுத்துக் கொடுக்க தில்லைக்கூத்தரோ பெரியபுராணம் பாட " உலகெலாம் " என்று அடியெடுத்துக் கொடுத்தார். திருவாரூர் பெருமான் தில்லை எனும் சிதம்பரத்தை அடியெடுத்துக் கொடுக்க தில்லையெம்பெருமானோ " உலகம் " எனும் மண் தத்துவத்தை உணர்த்தும் விதமாக அடியெடுத்துக் கொடுத்ததை என்ன சொல்ல ! இரண்டு இடங்களிலும் பதஞ்சலி மற்றும் புலிக்கால்முனிவர் ஆகிய இருவரும் பாததரிசனம் பெற்றனர்! சிதம்பரத்தில் பெருமானின் அதிர வீசி ஆடத் துவங்கிய இடது பாத தரிசனத்தைக் கண்டு பின்னர் திருவாரூர் வந்து இருந்தாடும் கூத்து கண்டு பங்குனி உத்திர நாளில் வலது பாத தரிசனத்தைக் காணப்பெற்றனர்!

சிவபெருமான் எல்லாருடைய இதயக் குகையிலும் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறார். கூத்தப்பெருமானை அகத்திலும் புறத்திலும் கண்டு சுவைத்த நிலையில் தம் அருளனுபவங்களைச் சமைய ஞானியரும் சித்தர்களும் தம் அருளனுபவங்களை நம்முடன் பகிர்ந்துள்ளார்.அவ்வரிசையில் காரைக்கால் அம்மையார் தம் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் பாடியதுபோல் " அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்கவேண்டும் " என வேண்டி விரும்பிப் பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீராம் கிருஷ்ணஸ்வாமி

# Manickavasakar's Devotion and Knowledge

*Oru Arizonan*

**Devotional attitudes of the Four Saivite Gurus:**

Each of the four Saivite Preceptors [gurus] had a different attitude of devotion towards Lord Siva. Thirugnanasambanathar considered Siva as his father. So, all of his Thevaram verses represent that form of devotion.In most of his songs, he praises Siva along with Uma, as father and mother. It fits, because when he was left crying alone by his father near the bank of a tank in Sirkazhi, to pacify him, he was fed the milk of knowledge by mother Parvathi.

Sundaramurthi Nayanar looked upon Siva with Sakha bhava, that of a friend. That friendship made him to address Siva as Pithan [mad man], askedParameswaranto go as a messenger --a go between -- to inform of his love to Paravai Nachiyar. He was called by all as Thambiraan Thozhar (தம்பிரான்தோழர்), a friend of Sivapiran . In addition, the liberty he took with the Lord can clearly be evinced in his poems.

Thirunavaukarasar[Appar]considered himself the servant of Siva. He always carried the uzhavaram [weeding tool] with him to remove all the thorns around the temples, and sanctified the service of Siva Temples with his Uzhavarappani [உழவாரப்பணி][2]. This attitude of service is extolled by his famous couplet 'தன்கடன் அடியேனையும் தாங்குதல் என்கடன் பணி செய்து கிடப்பதே'[3] , meaning the responsibility of Siva is to take care his devotee [Thirunavukarasar] and his responsibility is to perform Sivathondu [service to Siva] and be at peace with that service.

However, the relationship between Manickavasakar and Siva is totally different. It is like one betweenthe prodigal son and a loving parent. Manickavaasakar has expressed this information in various places in his Thiruvasakam. He expresses his gratitude to Siva by the following two linesIn Sivapuranam as: 'நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத் தாயிற்சிறந்த தயவான தத்துவனே'[3] [Oh, Philosopher!You have become better than a mother to me, a person worthless than a dog]. We can see such self-denunciation of Manickavasakar in many of his poems. We limit ourselves at this time to the devotion - bhakti, the knowledge of Manickavasakar and his message to us all.

**How to obtain the blessing of Siva:**

Everyday, we mechanically recite prayers to God/ Goddesses in various languages. Will it really bring upon us, the blessings of the God/s? Will we reach their abodes at the end of our lives? What is the best way to obtaining paralogam, or abode of Siva? Manickavasakar very clearly shows us the way in his Sivapuranam in the following lines:

சொல்லியபாட்டின்பொருளுணர்ந்துசொல்லுவார்....- 93-95

Those who sing understanding and feeling the meaning of the song that has been sung, will reach Sivapuram [Kailasam, Siva's abode]and will rest under the feet of Lord Siva, respected and praised by many.

Thiruvathavurar [Manickavasakar] makes it very clear that whatever words, songs, etc., we use to praise and pray Siva, we need to understand not only the meaning of those words, but also need to feel the inner meaning of those words. Once the inner meaning is felt within, the devotion becomes full, and our prayers reach Siva, towards whom we have directed our prayer.

With these three lines he throws away many of the blind beliefs we have towards prayer. Repeating words mechanically, without knowing what they mean, and without devotion to God -- will not bring any effect. At that time, there will be no difference between a tape-recorder, or a CD player, or a computer-recorded song that keeps on repeating -- and our prayer.

We know that these instruments -- which can sing the Lord's prayer a million times -- will not reach His abode. Then, how we can achieve that goal by just mechanically repeating anything?

What a reformer he was! In addition to his bhakti, as a preceptor, he also has guided us the way to reach the feet of Lord Siva and get His blessings. Great! His scientificknowledge: We generally attribute any and every scientific discoveries and knowledge to westerners. In the few centuries of rule by them, we tend to believeanything and everything they utter as scripture. However, it is not so. The theory of evolution, as taught in school, is postulated by Charles

Darwin. It will be surprising to find that information in Sivapuranam.

**புல்லாகிப்பூடாய்ப்புழுவாய்மரமாகி....– 26–31**
*In this ever-growingmixture of plants,*
*I took all these births, and am tired, my Lord --*
*As a blade of grass, a bush, a worm, a tree,*
*A stone, a human, a ghost, various groups,*
*Strong demons, sages, and demi-gods[Devas]!*

He goes beyond humans in the evolution ladder, and includes spirits and spiritual beings. Unless Manickavasakar has had that knowledge, how could he have written it in an orderly way? We are also schooled that it was Galileo Galilei, who discovered that the Earth is round, or a sphere, and, until that time, everyone thought it was flat as a board. Again, we can disprove that claim from 'திருவண்டப்பகுதி' [Thiruvandap pakuthi]of Thiruvasakam .

**அண்டப்பகுதியின்உண்டைப்பிறக்கம்...... 1–6**

*Theparts of the universe are of round spheres*
*With a nature that is immeasurable, big beautiful scene;*
*If we compare one by one and describe their beauty,*
*They spread to more than one hundred crores;*
*If we compare them to the small dust particles*
*That floating in the beam of sunlight entering the house,*
*The Supreme Sire [Siva] is larger than those.*

What a great description of Siva using the knowledge of the Universe! Manickavasakar says that this Universe[அண்டம்] consists of billions of stars that are of varied size, those look like the dust particles that float around in the beam of sunlight that we can see inside the house; if we compare the greatness of Siva, he is much greater than these stars as well as the universe. In these lines, he also describes the power of Lord Siva. All these stars, the Universe that gave birth to these stars are dust particles compared to Him. He creates an image of Lord Siva from human of view -- if he is our size, all these starts are like small dust particles. All his statements about the stars, their count, the shape of universe -- all are agreed upon by our scientists.

When the westerners were saying the the world is flat, Manickavasakar boldly stated that every planet, stars are spheres, the universe gave birth to them, and they are countless [when somebody says the count is more than one hundred crores, they imply that the count is almost infinite].

Next let us see his medical knowledge. He knew how the fetus grows inside the womb of its mother, and what dangers it faced before completing its growth and the pain it endured in childbirth! He describes this in detail in போற்றித் திருவவகல்[Potri Thiruvavakal] .

**யானைமுதலாஎறும்புஈறாய**
**ஊனமில்யோனியில்உண்வினைபிழைத்தும்**
**மானுடப்பிறப்பினுள்மாதாஉதரத்(து)**
**ஈனமில்கிருமிச்செருவினில்பிழைத்தும்....– 11–25**

*Escaping from the internal problems of*
*Non-defective wombs of elephant to small ants,*
*Escaping without damage from innumerable germs,*
*As human fetus inside mother's stomach,*
*In the size of Thandri , without splitting into two in first month,*
*Escaping from incessant attack as a single entity in second month,*
*Escaping from fatty liquid immersion in third month,*
*Escaping from total darkness in fourth month,*
*Escaping from death in fifth month,*
*Escaping from intolerable irritation in sixth month,*
*Escaping from miscarriage due to excess drooping in seventh month,*
*Escaping from constriction in eight month,*
*Escaping from the pain of not coming out in ninth month,*
*Bearing the vast ocean of pain during birth*
*Along with mother and escaping death in the tenth month.*

Is it not surprising to read the enumeration of particular type of attacks a fetus has to face, tolerate, grow, undergo the pain of birth along with mother, and survive! The pain of childbirth a mother undergoes is known to us all, but not the pain of the fetus to grow inside the womb, and the pain it undergoes to come out of mother's womb during its birth. A new-born child is unable to describe its pain to anyone because it does not know the language. It bears its silently and cries when it comes out.

Manickavasakar had this knowledge that is now known to us through medical science. Since he was a Siva-bhakta unparalleled, we should not conclude his sphere of knowledge was limited only tospirituality; he is well knowledge in science, and shows it in his poems.

***Continue...***

### ஆறுமுக நாவலர் பெருவிழா

அண்மையில் 08.12.2017 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருவிழா முன்னெடுக்கப்பட்டது. பெருந்திரளான ஆர்வலர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வு சபையின் நாவலர் ஆச்சிரம மண்டத்தில் சபைத்தலைவர் ஓய்வுநிலை நீதிபதி இ. வசந்தசேனன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் பிரதமவிருந்தினராகவும் வைத்திய கலாநிதி இ. லம்போதரன் (சைவசித்தாந்த மன்றம், கனடா) அவர்களும் யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி மி. விமலநாதன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கவிஞர் சோ.பத்மநாபன் (சோ.ப) அவர்களின் சிறப்புரையும் நல்லை ஆதீன குரு முதல்வரின் அருளுரையும் இடம்பெற்றது.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தங்கம், வெள்ளி, வெண்கல பதக்கங்களும் பணப்பரிசில்களும் இந்நிகழ்வில் வழங்கப்பட்டது. (இந்நிகழ்வின் மேலதிக விபரங்கள் படங்கள், போட்டி முடிவுகள் வரும் (தை) இதழில் வெளியாகும்.)

### கூத்தப்பெருமான் ஆனந்த தாண்டவம் செய்தருளும் பஞ்சசபைகள்



| குற்றாலம் | மதுரை | திருவாலங்காடு | சிதம்பரம் | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| சித்ர சபை | வெள்ளி சபை | ரத்ன சபை | பொற்சபை | தாமிர சபை |

### மாணிக்கவாசகப் பெருமான்




அவதரித்த
திருவாதவூர்



உபதேசம் பெற்ற
திருப்பெருந்துறை



முக்தி பெற்ற
சிதம்பரம்

**அனுப்புநர் :**

சைவபரிபாலன சபை,
இல. 66, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

**பெறுநர் :**

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................

Edited & Published by Mr. T. Mayoorakiri on behalf of the Saiva Paripalana Sabai - 1st Day of Markali Thingal
No: 450, K.K.S. Road, Jaffna (No. 66, College Road, Neraviyady, Jaffna.) & Printed at Shampavi Printers.
No: 267, 269, Kasthuriar Road, Jaffna. 16.12.2017